லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-11 ஏப்ரல் - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# பெண்களின் முன்னேற்றம் கேள்விக்குறியாகிவிட்டதா?





## வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து

### பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்







- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்

- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்





போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# தமிழகத்தின் வெட்கக்கேடு

பொள்ளாச்சியில் நடந்த பாலியல் வன்முறையும், கடந்த ஆறேழு ஆண்டுகளாக இருநூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் இப்படி பாலியல் வக்கிரத்துக்குப் பலியாக்கப்பட்டிருக் கிறார்கள் என்ற செய்தியும் ஒட்டுமொத்த தமிழகத்தையும் பதைபதைப்பில் ஆழ்த்தியிருக்கிறது. குற்றவாளிகளின் வலைப் பின்னல், அரசியல் கட்சித் தொடர்புகளின் பின்னணி என்று அடுத்தடுத்து வரும் செய்திகள் மக்களை மேலும் மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கு கின்றன. பெண்ணடிமைக்கு எதிரான போராட்டங்களைப் பல்வேறு நிலை களில் தொடர்ந்து நடத்தி, இன்றைக்குப் பெண் கல்வியிலும் பாலினச் சமத்து வத்திலும் தேசத்திற்கே முன்னோடியாக இருக்கிறோம் என்று ஒருபுறம் நாம் பெருமை பேசிக்கொண்டிருக்கும் நிலை யில்தான் மறுபுறம் இப்படியான மாபெரும் சறுக்கல்களையும் எதிர்கொள் கிறோம். பெண்கள் குறித்த, பெண்ணுடல் குறித்த உள்மன விகாரங்களின் உச்சம் இது.

பாலியல் சீண்டல்கள், வல்லுறவு முயற்சிகள், நம்பிக்கைத் துரோகங்கள் என்ற அளவில் இதுவரை பாலியல் கொடுமைகளை எதிர்கொண்டிருந்த பெண்களுக்கு இது அடுத்தகட்ட கொடுமையாக முளைத்திருக்கிறது, அவர்களை அந்தரங்கமாகப் படம் பிடித்து, அதைக் காட்டி மிரட்டி பாலிய வல்லுறவுக் குள்ளாக்கி, அதையும் படமாக்கி பணம் பறிப்பது, கூட்டு வல்லுறவுக்குப் பயன்படுத்துவது, வன்முறைக்கும் உள்ளாக்குவது என்பது. தமிழ்நாட்டின் சகல திசைகளிலிருந்தும் ‘அவர்களை சும்மா விடக்கூடாது’ என்ற வார்த்தைகள் ஏன் இன்று குற்றவாளி களுக்கு எதிராக ஒலிக்கின்றன என்றால், அவ்வளவு பெரிய மனக்கொதிப்பை இச்சம்பவம் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அரசின் அமைப்புகள், குறிப்பாக கோவை மாவட்டக் காவல்துறை, இந்த விஷயத்தை அணுகும் விதம் இச்சம்பவத்தின் தீவிரத்தையே அவர்கள் உணரவில்லையோ என்ற கேள்வியையே எழுப்புகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இச்சம்பவத்தில் தொடர்பிருப்பதாகச் சொல்லப்படும் நிலையில், தங்கள் தரப்பில் குற்றமிழைத்தோர் இருப்பின் அவர்களை உடனடியாகக் கட்சியைவிட்டு நீக்குவதும், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுமே ஆளுங்கட்சி செய்ய வேண்டிய முதல் வேலை. அப்படி இல்லாதபட்சத்திலும் குற்றவாளிகள் - அவர்கள் எந்த அரசியல் பின்னணியில் இருந்தாலும், அவர்கள் பின்னே குற்றவலையின் தொடர்பில் இருப்பவர்கள் அனைவரையும் கைதுசெய்வதன் மூலமாக, அவர்கள் மீது பாரபட்சமற்ற கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமாக தன்னுடைய தொடர்பின்மையை நிரூபிக்க வேண்டும். மாறாக, எதிர்க்கட்சிகளை வசைபாடுவதன் மூலமாகவும், பாதிக்கப்பட்ட பெண்களின் குடும்பங்களுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமாகவும் குற்றச்சாட்டுகளிலிருந்து ஆளும் தரப்பு தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது.


புதிய தொழில்நுட்பங்கள் கொண்டுவரும் புதிய குற்றங்களைத் தடுக்க புதிய சட்டங்களும், விசாரணை அமைப்புகளும் தேவை என்பதையும்கூட இச்சூழல் உணர்த்துகிறது. குற்றவாளிகளில் சிலரைக் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்திருக்கிறது காவல் துறை. ஆனால், இதற்கு முன்பு இப்படி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பாலியல் குற்றவாளிகள் பலரும் அவ்வழக்குகளிலிருந்து எளிதாக பிணையில் வெளிவந்திருக்கிறார்கள் என்பது இங்கே குறிப்பிடப்பட வேண்டியதாகும். அசாதாரணமானதும் இதுவரையில் சந்தித்திராததுமான இத்தகைய குற்றச்செயல்களை விசாரிக்க அவசரச் சட்டம் இயற்றப்பட்டு, அச்சட்டத்துக்கு முன்மேவு அதிகாரம் வழங்கப்பட்டு தனி நீதியமைப்பும் விசாரணை நடைமுறைகளும் உருவாக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

பெண்ணை வெறும் உடலாக மட்டுமே பார்ப்பதிலிருந்தும், ஆணின் தவறுகளை ஏதோ ஒருவகையில் நியாயப்படுத்துவதிலிருந்தும் விடுபடாத வரை இத்தகைய கொடூரங்களிலிருந்து நம் சமூகம் விடுபடவே முடியாது. பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீருக்கு நியாயம் கிடைத்தாக வேண்டும் என்றால், வீடுகளிலிருந்து மாற்றங்கள் தொடங்க வேண்டும்; கடுமையான தண்டனைகள், பிரச்சாரங்கள் வழி அரசு இதற்கான முனைப்பை உருவாக்க வேண்டும்!

**- ஆசிரியர்**

# வறுமை ஒழியாத வரையில் குற்றங்கள் ஒழியாது!

பெண் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் 'கல்வியே பெண்களுக்கான விடுதலையைப் பெற்றுத்தரும்' எனும் முழக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் தமிழகத்தில் பள்ளிகளுக்குச் சென்றுவருவதில் உள்ள சிரமம், பாலினப் பாகுபாடு, சமூக - பொருளாதார அழுத்தம் ஆகியவையே குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவதற்கான முக்கியக் காரணங் களாக உள்ளன என 'சம கல்வி' இயக்கமும் 'குழந்தைகள் உரிமைகளும் நீங்களும்' (CRY)



அமைப்பும் இணைந்து நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளி இடைநிற்றலுக்கும் குழந்தைத் திருமணத்துக்கும் உள்ள தொடர்புகள் குறித்து இந்த அமைப்பினர் கள ஆய்வு மேற்கொண்டனர். சென்னை, தருமபுரி, திண்டுக்கல், ராமநாதபுரம், சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர் ஆகிய பத்து மாவட்டங்களில் 210 பெண்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



இந்த ஆய்வில் பங்கேற்ற பெண்கள் 18 வயதுக்குள் திருமணம் செய்துவைக்கப் பட்டுள்ளனர். அவர்களில் 21 சதவீதத்தினர் 30 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மணமுடிக்கப் பட்டிருக்கின்றனர். வறுமை, வீட்டுக்கு அருகில் பள்ளி இல்லாதது, தரமான கல்வி கிடைக்காதது, நீண்ட தூரப் பயணம், பாதுகாப்பின்மை, சமூக பொருளா தாரக் காரணிகள் போன்றவற்றால் அந்தப் பெண்கள் குழந்தைத் திருமணத்துக்கு ஆளாக்கப்பட்டதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது. மேலும், ஆய்வில் பங்கேற்ற பெண்களில் 60 சதவீதத்தினர் தங்கள் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளிகள் இல்லாததால் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டதாகத் தெரிவித் துள்ளனர். சாதி, பாலினப் பாகுபாடு காரணமாகப் பள்ளியைவிட்டு விலகியதாக




19 சதவீதத்தினர் தெரிவித்துள்ளனர். இள வயதுத் திருமணத்துக்குக் குடும்ப வறுமையே காரணம் என 18 சதவீதத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நடைபெறும் குழந்தைத் திருமணங்களில் 17 சதவீதம் தமிழகத்தில்தான் நடக்கிறது எனத் தேசியக் குடும்ப சுகாதார ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ கத்தில் தருமபுரி மாவட்டத்தில்தான் அதிக எண்ணிக்கையில் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவதாக இந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தக் கள ஆய்வில் பங்கேற்ற பெண்களில் பெண்ணின் சரியான திருமண




வயது என்ன என்பது குறித்து 80 சதவீதப் பெண்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

குழந்தைத் திருமணம் செய்துவைக் கப்பட்ட 60 சதவீதப் பெண்கள் சிக்கலான பிரசவத்தை எதிர்கொண்டுள்ளனர். மேலும், 50 சதவீதத்தினருக்குப் பிரசவத்தின்போது அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொண்ட போதும் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவதைத் தடுக்க முடியாத நிலையே நீடிக்கிறது. இதற்குத் தீர்வாகக் கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு கமிட்டிகளை வலுப்படுத்த வேண்டும். குழந்தைத் திருமணத்திலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட ரீதியான ஏற்பாடுகளைத் தினசரி நடவடிக் கையாக அரசு அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும்; குழந்தைத் திருமணம் தண்டனைக்குரிய குற்றம் என்பதைப் பஞ் சாயத்து அளவில் வலியுறுத்த வேண்டும் உள்ளிட்டவற்றை அரசின் கவனத்துக்கு இந்த அமைப்பினர் கோரிக்கையாக வைத்துள்ளனர்.

**- K. ரமேஷ் குமார்**

# தேர்தல் ஆணையத்துக்கு பெரும் சவால்




சமூக வலைதளங்களில் மக்களவை தேர்தலுக்கான நடத்தை விதிமீறல்களும், அதன் மீதானப் புகார்களும் குவியத் துவங்கி விட்டன. இதன் மீது நடவடிக்கை எடுப்பது, மத்திய தேர்தல் ஆணையத்துக்கு பெரும் சவாலாகி வருகிறது. தற்போது அதிக புழக்கத்தில் உள்ளஆன்ட்ராய்ட் செல்போன்களால் சமூக வலைதளங்களின் பயன்பாடு பொதுமக்களிடம் பெருகி வருகிறது. அவர்களது பெரும்பாலான நடவடிக்கைகள் சமூக வலைதளங்களிலும் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக, மத்திய தேர்தல் ஆணையம் இந்தமுறை மக்களவை தேர்தலில் சமூக வலைதளங்கள் மீதும் தனது கண்காணிப்பை தொடங்கி உள்ளது.

இதற்கென தனியாக, 'சிவிஜில்' எனும் பெயரில் ஒரு செல்போன் செயலியையும் அறிமுகப்ப டுத்தி உள்ளது. தேசிய அளவிலான இந்த செயலி, மாநில எல்லைகளுக்கு உட்பட்டே செயல்படும். தமிழ்நாட்டில் இருந்து கொண்டு மற்ற மாநிலங்கள் மீதானப் புகார்களை இதன்மூலம் அளிக்க முடியாது. இதன் மீதான விழிப்புணர்வு பொதுமக்கள் இடையே இன்னும் ஏற்படாததால் பலரும் ட்விட்டர் போன்ற சமூக வலைதளங்களில் புகார்களை பதிவிடத் துவங்கி உள்ளனர்.

இது குறித்து 'இந்து தமிழ்' நாளேட்டிடம் மத்திய தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறும்போது, 'தமது பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெறவில்லை எனவும், அரசியல் கட்சிகள் இந்திய ராணுவத்தையும் அதன் படங்களையும் பிரச்சாரங்களில் பயன்படுத்துவதாகவும் புகார்கள் குவிகின்றன. பல புகார்களில் அந்த சமூக வலைதளக் கணக்குகள் போலியானவையாகவே இருப்பது ஆணையத்துக்கு பெரும் சவாலாக உள்ளது. இவற்றை சமாளித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முதன்முறையாக ஆணையம், சமூக வலைதளங்களுக்கான மூன்று அதிகாரிகள் கொண்ட கண்காணிப்புக்குழுவை அமைத்துள்ளது' எனத் தெரிவித்தன.

கண்காணிப்புக் குழுவினரின் உத்தரவின் பேரில் ஆணையத்துக்கு சமூக வலைதளங்கள் மூலம் வரும் புகார்கள் மீதுநடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மேலும், வாட்ஸ்அப் உள்ளிட்டவற்றில் நிகழும் தேர்தல் விதி மீறல்களையும் கண்காணித்து தீவிர நடவடிக்கை எடுக்க உள்ளனர்.

இதற்காக, சில வெளிநாட்டு கண்காணிப்பு செயலிகளை ஆணையம் வாங்க திட்டமிட்டுள்ளது. இதனால், மக்களவை தேர்தலின் சில முக்கிய விஷயங்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு உள்ளன. எனினும், இந்திய கண்காணிப்பு செயலிகளைப் பெறுவதில் உள்ள பல்வேறு சிக்கல்கள் காரணமாகவும், அதற்காக ஏற்படும்

காலதாமதத்தை தவிர்க்கவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

வழக்கமாக தேர்தல் நடத்தை விதி மீறுபவர்களை தண்டிக்க ஆணையத்தின் சட்டத்தில் இடமில்லை எனக் கருதப்படுகிறது. இதனால், தேர்தல் நடத்தை விதி மீறல்களை அரசியல் கட்சிகள்தான் தார்மீகப் பொறுப்பில் அவற்றை முடிந்தவரை பின்பற்றி வருகின்றன. எனவேதான் ஆணையத்தால் பிடிக்கப்படும் ரொக்கம், மது,




போதைப் பொருட்கள் ஆகியவை மீது பதிவான வழக்குகள் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விடுகின்றன. இவர்களால் அவ்வழக்குகள் முறையாக விசாரிக்கப்படாமல் பெரும்பாலான குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை எனவும் புகார் உள்ளது. இதைத் தடுக்க ஆணையத்திற்கே அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவர தொடர்ந்து வற்புறுத்தியும் பலன் கிடைக்கவில்லை.

இந்நிலையில், சமூக வலைதளங்களில் நடைபெறும் விதிமீறல்கள் மீது ஆணையம் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அந்த வழக்குகளை வழக்கம்போல் விசாரிக்கும் போலீஸாரின் நடவடிக்கைகளை பொறுத்தே தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவர். இதனால், சமூக வலைதளங்களில் வீதிகளை மீறுபவர்கள் அனைவருமே தண்டிக்கப்படுவது என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

**- வீ. சிவசங்கரன்**

**தமிழ்நாட்டிற்கு தேவை நேர்மையான ஆட்சியாளர்கள் அல்ல, நேர்மையான வாக்காளர்கள் என்பதை நாம் உணராத வரை நாமெல்லாம் அடிமைகள் தான்... மாற்றம் நம்மிடமிருந்து...**

**- ஆசிரியர்**

**வாழ்க தமிழ்!** **வளர்க தமிழகம்!!**

# மக்கள் விசாரணை ®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

**ஆண்டு-7 இதழ்-11 ஏப்ரல்-2019**

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V.அருணாசலம், A.C.குமார், S.அனந்த கிருஷ்ணன்**, MA,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசி ஈஸ்வர் விருதுநகர், N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
V.கிஷோர் குமார், சதீஷ், அகிலாண்டேஸ்வரி
குருதேவ், ஆரணி ஏழுமலை, M.முருகன்
சத்தியநாராயணமூர்த்தி, N.குப்புசாமி, முரளி
நீலகண்டன், N.சீனிவாசன், G.ஆனந்த்குமார்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாசலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# பெண்களின் முன்னேற்றம்

# கேள்விக்குறியாகிவிட்டதா?

நடிகர் ராதாரவி நடிகை நயன்தாரா குறித்து பொது மேடையில் ஆபாசமாகப் பேசியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து தன்னுடைய தோற்ற பொலிவாலும், சீரிய நடிப்பு திறமையினாலும் வெற்றிப்படங்களைக் கொடுத்துவரும் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்து கொண்டுள்ளார்.

'உன்னைப்போல் ஒருவன்', 'பில்லா 2' படங்களை இயக்கிய சக்ரி டோலட்டி இயக்கத்தில், நயன்தாரா கதாநாயகியாக நடித்த திரைப்படம் கொலையுதிர் காலம். இந்தப் படத்தில் நடிகை பூமிகா முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தை பூஜா என்டெர்டெயின்மென்டுடன் இணைந்து, எக்ஸெட்ரா என்டெர்டெயின்மென்ட் தயாரித்துள்ளது.





இந்நிலையில் இப்படத்தின் பத்திரிகை யாளர் சந்திப்பு நேற்று சென்னையில் நடைபெற்றது. அப்போது நிகழ்ச்சியில் பேசிய நடிகர் ராதாரவி, ' நயன்தாரா ஒரு சிறந்த நடிகை. ஆனால் அவரை நடிகையர் திலகம், புரட்சி தலைவி என்று அழைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவரை பற்றி வராத செய்தியே இல்லை. ஆனாலும் அவர் சினிமாவில் இருக்கிறார். தமிழ்நாட்டு மக்கள் எல்லா வற்றையும் 4 நாளுக்கு தான் ஞாபகம் வைத்திருப் பார்கள். அப்புறம் மறந்துடுவாங்க' என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், ' நயன்தாரா பேயாகவும் நடிக்கிறார். அதே சமயம் சீதையாகவும் நடிக்கிறார். முன்பெல்லாம் புனிதமான கதராபாத்திரத்தில் நடிப்பதற்கு, கே.ஆர். விஜயா போன்ற நடிகைகளைத் தான் தேடுவார்கள். ஆனால் இப்போது யார் வேண்டுமானாலும் நடிக்கலாம். பார்த்தவுடனே கும்பிடறவங்களும் நடிக்கிறார்கள், பார்த்த உடனே கூப்பிடுறவங்களும் நடிக்கிறார்கள்' என்று ஆபாசமாகப் பேசினார்.

ராதாரவியின் இந்த சர்ச்சை பேச்சு அங்கிருந்தவர்களை முக சுழிக்க வைத்தது. இதனால் நிகழ்ச்சியில் சலசலப்பு ஏற்பட்டது. நயன்தாராவை குறித்து பேசிய ராதாரவி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாடகி சின்மயி கேட்டு கொண்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய வகையில் பேசிய நடிகர் ராதாரவியை கட்சியை விட்டு நீக்கிய மு.க.ஸ்டாலினுக்கு நயன்தாரா நன்றி தெரிவித்துள்ளார். முன்பெல்லாம் கும்பிடுகிற மாதிரி இருக்கிற கே.ஆர்.விஜயா போன்றவர்களைத்தான் சீதை வேடங்களில் நடிக்கக் கூப்பிட்டார்கள். ஆனால் இப்போது கூப்பிடுகிற மாதிரி இருக்கிற நயன்தாரா போன்றவர்களையெல்லாம் கூட சீதை வேடத்தில் நடிக்கக் கூப்பிடுகிறார்கள்' என்று 'கொலையுதிர்காலம்' பட விழாவில் ராதாரவி பேசியது பரபரப்பை ஏற்படுத்தியது இந்நிலையில் அவர் திமுகவில் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் ராதாரவி.

இதுகுறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் கண்டனம் தெரிவித்திருந்த திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், 'பெண்ணுரிமை முன்னிறுத்தும் திமுகவில் அங்கம் வகிக்கும் நடிகர் ராதாரவி அவர்களின் திரைத்துறை சார்ந்த பெண் கலைஞர்கள் குறித்த கருத்து ஏற்க இயலாதது. கடும் கண்டனத்திற்குரியது. கழகத்தினர் யாவரும் கண்ணியம் குறையாத வகையில் கருத்துகளை தெரிவிக்க வேண்டும். மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்'' எனத் தெரிவித்து இருந்தார்.



இதற்காக மு.க.ஸ்டாலினுக்கு நன்றியை தெரிவித்துள்ள நயன்தாரா, ''என்னை பற்றி சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த ராதாரவியை விசாரிக்க குழு அமைக்க வேண்டும். மூத்த நடிகரான ராதாரவி,



Nayanthara
Artist

25.03.2019

What remains ghastly shocking about his male chauvinistic speeches are that he never ceases to get applause and laughs from some members of the audience. As long as the audience encourage sexist remarks, speakers like Mr.Radha Ravi will continue to thrive on misogyny and cracking of denigrating jokes against women. I strongly urge well intentioned citizens and my beloved fans to deeply discourage the behaviour of the likes of Mr.Radha Ravi. Not withstanding the aforesaid advisory, through this statement I would like to strongly register my condemnation and protest against the derogatory speeches made by Mr.Radha Ravi against women and children in general and me in specific.

God has been amply kind in giving me wonderful professional opportunities and the affectionate movie-goers of Tamil Nadu have amply rewarded me for my good performances. Irrespective of all negative remarks and aspersions cast upon me, I shall continue to take up the multifaceted roles of Sita, ghost, Goddess, friend, wife, lover, so on and so forth with the sole intention of providing maximum entertainment to my fans.

**Lastly, my humble question to the South Indian Artistes' Association (Nadigar Sangam):- Will you set up the Internal Complaints Committee as per the Hon'ble Supreme Court's dictum and commence an internal inquiry as per Vishakha Guidelines???**

Once again, thanking all the good hearts that have stood by me yet again supporting me through this little phase of negativity!

Now, Getting back to work!
With God's Grace and your unconditional Love as always!!

Page 2

இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டுபவராக இருந்திருக்க வேண்டும். திரைப்படத்தில் வாய்ப்பு கிடைக்காமல் போனதால் இதுபோன்று கீழ்த்தரமாக பேசி பிரபலமடைகிறார். பெண்களை மிகவும் இழிவாக பேசுபவர்களை பற்றி மிகவும் வருந்துகிறேன்.

உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்படி விசாகா கமிட்டி அமைக்க நடிகர் சங்கம் நடவடிக்கை எடுக்குமா? கடவுள் கொடுத்த வரத்தால் திரையுலகில் சிறப்பான இடம் கிடைத்துள்ளது. ராதாரவி தொடர்ச்சியாக மேடைகளில் நடிகைகளைப் பற்றி இழிவாக பேசி வருகிறார். அவரை கட்சியை விட்டு நீக்கி கண்டித்ததற்கு மு.க.ஸ்டாலினுக்கு நன்றி'' என அவர் தெரிவித்துள்ளார்.

**- ஆ.மவுரியன்**

முனைவர் **ஆ.மவுரியன்**





வீர தமிழச்சிகளின் வரலாறு..!

(18)

# ஈ.வெ.ரா. நாகம்மையார்

**தமது சுகவாழ்வைத் துறந்தார். விலையுயர்ந்த நகைகளைத் துறந்தார். மெல்லிய பட்டாடைகளை வெறுத்தார். முரட்டுக் கதராடை உடுத்தினார்**

அன்பும், அடக்கமும், அஞ்சாமையும் ஒருங்கே அமையப் பெற்ற அன்னையார் ஈ.வெ.ரா. நாகம்மையார் அவர்கள். இவருடைய வாழ்க்கைச் சரிதம் பெண்மக்களுக்குப் பெரும் படிப்பினையை ஊட்டக்கூடியது; ஆண்மக்களுக்கும் அவ்வாறே சாதாரண வாழ்க்கையையுடைய நடுத்தரக் குடி. ஈ.வெ. ரா.வின் அன்னையாருக்கு உறவினர்.

அன்னை நாகம்மையார் சாதாரண குடும்பத்தில் பிறந்த இந்தப் பெண் மணி செல்வச் செழுமையில் திளைத்த ஈ.வெ. ராமசாமி அவர்களை கைப்பிடித்தார். அந்தக் கால கட்டத்திலேயே இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பிப் பிடிவாதமாக இருந்து திருமணம் செய்து கொள்வது என்பது சாதாரணமானதல்ல. வைதிகப் பழக்க வழக் கத்தில் வளர்ந்த இந்தப் பெண் சுட்டெரிக்கும் பகுத்தறிவுச் சூரியனின் வெப்பத்தைத் எதிர் கொள்வதில் மூச்சுத் திணறியவர்தான். பெரியாரிடமா நடக்கும்? தம் வழிக்குக் கொண்டுவர பல உபாயங்களை மேற்கொண்டு வெற்றியும் பெற்றார்.

நான் மட்டும்தான் பகுத் தறிவுவாதி - வீட்டில் அப்படி இல்லை என்று சொல்பவர்களுக்கு இது ஒரு பாடம்! குடும்பத்தைத் திருத்தாத நீயா குவலயத்தைத் திருத்தப் போகிறாய்? என்ற கேள்வியை அனாவசியமான தாகக் கருத முடியாதே! எந்த அளவுக்கு அம்மை யார் தயாரிக்கப்பட்டார்? கள்ளுக்கடை மறியலைத் தலைமை தாங்கி நடத்தும் அளவுக்கு -காங்கிரஸ் தலைவர் காந்தியாரின் கவனத்தையும், கருத்தையும் கவரும் அளவுக்குத் திற மையை வெளிப்படுத்தியவர்.

பின்னாளில் ஈ.வெ.ரா.சொந்த வாழ்வைத் துறந்து பொதுநல வாழ்வில் ஈடுபட்டார். அன்னையாரும் கூடவே அச்சேவையில் இறங்கினார். ஈ.வெ.ரா. பொதுநல வாழ்வில் சிறப்படைந்ததற்கு காரணம் அன்னையாரே. அன்னையாரின் பூரண உதவியின்றேல், ஒத்துழைப்பின்றேல் ஈ.வெ.ரா. சிறப்படைந்திருக்க முடியாது. இது மறுக்கமுடியாத உண்மை. 1920 ஆம் ஆண்டு முதல் 6 ஆண்டுகள் அன்னையார் எல்லாக் காங்கிரஸ்களுக்கும், அரசியல் மகாநாடுகளுக்கும் கணவருடன் தவறாமல் போய் வருவதுண்டு. அவர் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினராயிருந்திருக்கிறார்.

*1920 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தது. ஈ.வெ.ரா.வும் அதில் அதிதீவிரமாக ஈடுபட்டார். அன்னையாரும் தமது சுகவாழ்வைத் துறந்தார். விலையுயர்ந்த நகைகளைத் துறந்தார். மெல்லிய பட்டாடைகளை வெறுத்தார். முரட்டுக் கதராடை உடுத்தினார். நாம் தேசத்தின் ஏழை மக்களின் நன்மைக்கு உழைக்கின்றோம். ஆதலால் நாமும் எளியார் போலவே ஆடையணிகள் பூணவேண்டும் என்னும் கருத்தையே மேற்கொண்டார். அஞ்சாமல் வெளிவந்தார். தமிழ்நாட்டுப் பெண்களுக்கு வழிகாட்டியாக முன்வந்தார். ஒத்துழையாமை இயக்கம் வலுவடைந்தது. அரசாங்கத்துக்கும் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் பலத்த போராட்டம் இச்சமயத்தில் அன்னையார் முன்னணியில் நின்று போராடினார். இது தமிழ்நாட்டில் ஒரு பெருங்கிளர்ச்சியை உண்டாக்கிற்று. இதனால் அனேக பெண் மக்களும் தைரியமாக இப்போரில் கலந்துகொள்ள முன்வந்தனர்.*

*1921 ஆம் ஆண்டில் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் வெகு மும்முரமாக நடைபெற்றது. அரசாங்கத்தாரால் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஈ.வெ.ரா.வும் அவர் தொண்டர்களும் தடையை மீறினர்; கைது செய்யப்பட்டனர். மறுநாள் அன்னையார் ஈ.வெ.ராவின் தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாளுடன் புறப்பட்டார். அரசாங்கத்தின் தடையுத்தரவை மீறினார். ஈரோட்டில் பெருங்கொந்தளிப்பு. தமிழ்நாட்டில் பெருங்கிளர்ச்சி. அரசாங்கத்துக்குப் பெருந்திகைப்பு. உடனே தடையுத்தரவை நீக்கினர் அரசாங்கத்தார். அன்னையாரையும் அவர் தோழர்களையும் கைது செய்யாமல் விட்டனர். கைது செய்திருந்தால் ஈரோட்டின் நிலைமை எப்படியாகி இருக்கும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும்.*

*அச்சமயம், மறியல் சம்பந்தமாக அரசாங்கத்துடன் சமாதான ஒப்பந்தப் பேச்சு நடந்தது. சர். சங்கரநாயர் தலைமையில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இதற்கு மாளவியா மகாநாடு என்று பெயர், இம்மகாநாட்டில் திரு. காந்தியார், முக்கியமாக ஈரோட்டு மறியலையே குறிப்பிட்டார். ஈ.வெ.ரா. நாகம்மாளின் அபிப்பிராயம் தெரிந்தே முடிவு செய்ய வேண்டும் என்று கூறினார்.*

*சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்துவது என் கையில் இல்லை. ஈரோட்டில் இருக்கும்*


Periyar - Nagammaiyar

*இருபெண்மணிகளின் கைகளில் (தந்தை பெரியாரின் இணையர் நாகம்மையார் - தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாள்) இருக்கிறது என்று காந்தியார் மதிக்கும் அளவுக்கு நிமிர்ந்து நின்றார். வைக்கம் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் தந்தை பெரியார் சிறைப்பட நேர்ந்தபோது, அப்போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தும் அளவுக்கு அவர் உயர்ந்தார்.*

**ஒத்துழையாமை இயக்கம் மறைந்தது. 1924 ஆம் ஆண்டில் வைக்கம் சத்தியாகிரகம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் ஈ.வெ.ரா. ஈடுபட்டார். நாகம்மையாரும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். தமிழ்நாட்டிலிருந்து பல பெண்களையும் வைக்கத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போராட்டத்தில் கேரளப் பெண்களும் உற்சாகத்துடன் சேரும்படி செய்தார். தமது கணவர் கைதியான பிறகும், காங்கிரசின் உதவி கிடைப்பதற்கு முன்பும் தனித்து நின்று அப்போராட்டத்தை அஞ்சாமல் நடத்தினார்.**

**- தொடரும்**

பாதிக்கப்பட்ட பெண்களின் பெற்றோர்கள் அடையாளத்தை மறைத்து நிற்கிறார்கள். பாதிப்பைத்தந்தபையனின்தாயோவீராவேசமாக வாதாடுகிறார். பெண்ணை மட்டுமே அவமான உணர்வோடு வளர்க்கவில்லை. பெண்ணைப் பெற்றதாலேயே அவமானப்பட்டு நிற்க நினைக்கிறோம். ஏன் சமூகம் இப்படி இரண்டு மதிப்பீடுகளோடு தொடர்ந்து இயங்கிவருகிறது? ஏழு வருடங்களாக எத்தனையோ பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓரிருவர் புகார் அளித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் மௌனம் காத்து நிற்கிறார்கள். ஒரு பெண்ணுக்குக் குடும்பம் ஆதரவாக நிற்க, அவர்கள் காவல் நிலையத்தை அணுகியிருக்கிறார்கள்.

மௌனமான துயரம் தொடரும். யோசித்துப் பாருங்கள்; எத்தனை பெண்கள் வெளியே சொல்ல முடியாமல் உள்ளுக்குள்ளேயே பதற்றத்தோடு மருகிக்கொண்டு இருப்பார்கள்?

ஏனென்றால், கயவர்கள் கையில் மாட்டியிருந்த வீடியோ படங்கள், இப்பொழுது எங்கே எப்படி வெளியே வருமோ என்ற பதற்றமும் விசாரணையில் தனது அடையாளம் தெரிந்துவிடுமோ என்ற பயமும் அவர்களைத் துரத்தும். இழந்ததை அவமானமாகக் கருதாமல் கடந்து போ என்று சொல்லிவிடுவது சுலபம். ஆனால், பல வருடங்களாக மண்டைக்குள் ஏற்றப்பட்டிருக்கும் அவமானம் என்ற துருவைத் துடைத்துவிட முடியுமா என்று தெரியவில்லை.

# கேள்வி கேட்காதவரை துன்பம்தான்!

இப்போதுதான் நமக்குப் பிரச்சினையின் பூதாகாரம் தெரிய ஆரம்பித்திருக்கிறது. ஆனால், ஓரிரண்டு நாட்களில் பாலியல் பூதச் செய்தியை வேறு பூதச் செய்தி வந்து சாப்பிட்டுவிடும். நாமும் அதைக் கவனிக்கப் போய்விடுவோம். ஆனால், பாதிக்கப்பட்ட பெண்களின்



இதைப் படிப்பவர்களில் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம்; பாதிக்கப்பட்டது தெரிந்த குடும்பங்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இருக்கலாம். இப்போது இந்தப் பெண்களுக்கும் குடும்பங்களுக்கும் தேவைப் படுவது சரியான ஆற்றுப்படுத்துதல்.

பாதிக்கப்பட்ட பெண்கள் போலீஸிடம் சொல்ல வேண்டுமென்று இல்லை. உங்களுக்குச் சரியாகப் பட்டால் உங்கள் பெற்றோர் உங்களோடு துணை நிற்பார்கள் என்று பட்டால் அவர்களிடம் பகிருங்கள். அப்படியான நம்பிக்கை அவர்களிடம் தோன்றாவிட்டால், நீங்கள் கடந்து வந்த பாதையில் உங்களின் நம்பிக்கைக்குரிய பெரிய வயதுப் பெண்கள் (டாக்டர், டீச்சர், அத்தை) யாரிடமாவது சொல்லுங்கள். எவ்வளவுதான் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தாலும் ஆண்கள் வேண்டாம். இது ஆண்கள்மீதான விமர்சனமல்ல. உடல் ரீதியான, மனரீதியான உளைச்சல்களைப் பகிர தற்சமயம் சரியான துணை, வழிகாட்டக் கூடிய பெண்கள்தாம்.

வாழ்க்கை வாழ்வதற்குத்தான். துணிச்சலோடு கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் துயரத்திலிருந்து

வெளிவரப் பாருங்கள். ஆக்கப்பூர்வமான இலக்கு ஒன்றை வகுத்துக்கொண்டு, அதில் உங்கள் முழு ஆற்றலையும் நேரத்தையும் செலுத்துங்கள். நடந்ததை விபத்தாகப் பார்க்கப் பழக ஆரம்பியுங்களேன். நம்முடைய முன் யோசனையற்ற, பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாத தன்மையால் என்ன நேரிடும் என்பதற்கு பொள்ளாச்சி சம்பவங்களே பெரிய பாடம். இந்த வயதில் ஆண்களுடன் பேசவும் நேரம் செலவழிக்கவும் தோன்றும். காதலிக்க யாராவது கிடைத்தால் காதலிக்கவும் தோன்றலாம்.

யாரைக் காதலிக்கிறோம், எதற்காகக் காதலிக்கிறோம் என்ற கேள்விகளை உங்களுக்குள்ளேயே கேட்டுக் கொள்ளுங்கள். என்னுடைய ஒரு பயிலரங்கில் மாணவி ஒருவர் என்னிடம், "காதலிக்கும் ஆண் சரியானவன்தானா என்று எப்படிக் கண்டுபிடிப்பது" எனக் கேட்டார்.

**நீங்கள் காதலிக்கும் ஆண் உங்களிடம் உங்கள் அழகைப் பற்றியும் உடலைப் பற்றியும் மட்டுமே பேசுகிறாரா? உங்கள் படிப்பு, வேலை, வாழ்க் கையில் உங்களுக்கான கனவுகள் ஆகியவை பற்றிக் காதுகொடுத்துக் கேட்பதில்லையா? தனியிடங்களில் சந்திப்பது பற்றி மட்டுமே ஆர்வம் காட்டுகிறாரா? மணந்துகொள்ளப் போகிறோமே; அதனால் கொஞ்சம் நெருங்கிப் பழகினால் என்ன தவறு என்று கேட்கிறாரா? உடல் ரீதியான இச்சைக்குக் கொஞ்சமாவது ஈடுகொடுக்காவிட்டால் உங்களை விட்டுப் போய்விடுவாரோ, காதலும் முறிந்துவிடுமோ என்ற பயம் வருகிறதா?**

மேற்கண்ட கேள்விகளுக்கு பதில் ஆம் என்றால், இந்த நட்பு/உறவு அல்லது காதல் பற்றி நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். காதலிக்கும் ஆண்கள் எல்லோரும் மோசம் என்பதில்லை. அவர்களை வளர்த்த விதத்தில் உடல்ரீதியான இச்சை என்பதை அவர்கள் இன்பமாகப் பார்க்கிறார்களே தவிர அந்த இச்சையின் அளவு எதுவரை நீளும் அல்லது நீளலாம் என்பது பற்றிய முழுமையான புரிதல் இல்லை. 'இதுக்குப் போய் அலட்டிக்கலாமா' என்ற பார்வைதான்



அவர்களிடம் மேலோங்கி இருக்கும்படி அவர்கள் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். உங்கள் உறவின் விழைவும் உடல் ரீதியான இச்சையும் உங்களுக்கும் வலியாகக் கூடாது; இன்னொருவருக்கும் வலியாகக் கூடாது. ஏமாற்றுமொழிக்கு மயங்கவும் வேண்டாம்; ஏமாற்று நம்பிக்கையையும் தர வேண்டாம்.

இறுதியாக முக்கியமான ஒன்று, நாங்கள் பாலியல் தொழில் செய்யும் பெண்களிடம் சொல்வது உண்டு. "தெரியாத வாடிக்கையாளர் என்றால் அவர்கள் கூப்பிடும் இடத்துக்கு நீ போகாதே; உனக்குப் பழக்கம் இருக்கும் இடத்துக்கு அவர்களை அழைத்துச் செல்" என்போம். ஏனென்றால், பாலியல் தொழிலில் ஒருவருக்கு என்று கூப்பிட்டு, கூட்டுப் பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தி கொடுமைப்படுத்துபவர்களும் உண்டு. பாலியல் தொழிலாளர்களுக்கே இப்படியான எச்சரிக்கை தேவை என்றால், காதலிப்பவர்கள் இன்னும் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. காதலிக்கும் யாரையும் தனி இடங்களில் உங்களுக்கு அறிமுகம் இல்லாத இடங்களில் சந்திப்பதைக் கண்டிப்பாகத் தவிருங்கள். பொது இடங்களில் தனியாக உட்கார்ந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை நீங்கள் கையாளக் கற்றுக்கொண்டேதான் ஆகவேண்டும்.

**- கனக துர்கா**

# சாகாக் கலை

## எனப்படும்

# காயகல்பம்

வள்ளலார் அருளிய கல்ப மருந்து



**பஞ்சபூதங்களின் குணங்கள்:** *பஞ்சபூதத் தன்மையைப் போல மருந்துகள் கூட்டப்பட்டால், அம்மருந்துகள், மரணத்தை வெல்லச் செய்யும். பஞ்சபூதங்கள் நிலைத்திருப்பதைப் போல மனித உடலையும் நிலைத்திருக்கச் செய்யும் என்பது இதன் கருத்தாகக் கொள்ளலாம்.*

**பஞ்சபூத மொன்று கூடில் பளிங்கு போல தீதமாம்**

**விஞ்சையுப் பென்றே வழங்கி விளையும் பூமி நாதமே**

**நஞ்சதாகும் நாதநீரில் நாட்டுதோஷம் காற்றினில்**

**பஞ்சுபோல பறந்துபோகும் பாட்டை சொன்னேனாண்டையே**

*என்றும் கூறுவர்.*

**பூ நெல்லி நீர்மிளகு பொற்கடுக்காய் வான் மஞ்சள்**

**கானகத்து வேம்பரிசி காரிகையே மானங்கேள்**

**ஒன்றரை ஒன்றேகால் ஒன்று உறுதிமுக்கால்**

**கன்றரைக்கை யான்நீரில் தேய்**

*என்னும் மருத்துவப்பாடல், நெல்லிக்காய், மிளகு, கடுக்காய், மஞ்சள், வேம்பரிசி என்னும் மருந்துப் பொருள்கள் முறையே, மண், நீர், தீ, காற்று, ஆகாயம் எனக் கூறுவதுடன் 6,5,4,3,2 என்னும் அளவுகளைக் குறிப்பிடுகிறது.*

*பஞ்சபூதங்களின் குணங்கள் 5மண், 4நீர், 3தீ, 2காற்று, 1ஆகாயம் என்ற விகிதத்தில் இருக்கின்றனவென்று மேலே குறிப்பிடப்பட்டது. இதன் அடிப்படையில் மருந்துப் பொருள்கள் கூட்டப் படுகின்றன என்பது கருதத்தக்கது.*

1. *இனிப்பு = மண் + நீர்*
2. *புளிப்பு = மண் + தீ*
3. *உவர்ப்பு = நீர் + தீ*
4. *கைப்பு = காற்று + ஆகாயம்*
5. *கார்ப்பு = தீ + காற்று*
6. *துவர்ப்பு = மண் + காற்று*

*என, சுவைகளில் ஐம்பூதங்கள் கலந்திருக்கின்றன.*

**பஞ்சபூதமும் நாடியும்**: *மனித உடலில் அமைந்திருக்கும் வாதம், பித்தம், ஐயம் நாடிகள் சிறப்பானவை. இந்த மூன்று நாடிகளைக் கொண்டு உடம்பில் உருவாகியிருக்கும் அல்லது பிணித்திருக்கும் நோய்கள் கண்டறியப் படுகின்றன. இந்த மூன்று நாடிகளும் மூன்று பூதங்களின் கூறுகளாகச் செயல்படுகின்றன.*

*வாதம் காற்றின் கூறாகவும், பித்தம் தீயின் கூறாகவும், ஐயம் நீரின் கூறாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பித்தம் நீங்கலாக,*

வாதம் காற்று + ஆகாயம், ஐயம் நீர்+மண் என்று இரண்டு பூதச் சேர்க்கையும் கூறுவர்.

**நாடியும் சுவையும்:** சித்த மருத்துவ முறைகளில் சிறந்த முறையாகக் காணப் படுகின்றவற்றுள் சுவையைக் கொண்டே நோயை அறிந்திடும் முறை சிறப்பிடம் பெறுகிறது. நோயாளியின் நாவில் எவ்வகையான சுவை தோன்றுகிறதோ அச்சுவையைக் கொண்டு நோயின் வகையை அறிந்து, அதற்குரிய மருத்துவ முறையை மருந்தாகக் கொள்கின்றனர்.

நாவில் இனிப்புச்சுவை தோன்றினால் ஐயம் மிகுந்த தென்றும், கசப்புச்சுவை தோன்றினால் பித்தம் மிகுந்ததொன்றும், புளிப்புச் சுவை தோன்றினால் வாதம் மிகுந்த தென்றும், துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு ஆகிய சுவை தோன்றினால் வாதபித்த ஐயம் கலந்த தென்றும் தெரிகிறது.

**பஞ்சபூதமும் நோய்த்தீர்வும்:** சுவைகள், ஒவ்வொன்றிலும் இரண்டு பூதங்கள் சேர்ந்து இருக்கின்றன. நாடிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பூதம் இருக்கிறது. இதனை அறிந்து கொண்டால், நோயின் சுவையை அறிந்து, அதனால் எந்த பூதம் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை அறிய முடியும். அதற்கு எந்தச் சுவையுள்ள பொருளை வழங்கினால் வளர்ந்த பூதத்தின் வளர்ச்சி கட்டுப்படும் அல்லது குறையும் என்பதை எளிதில் அறியக்கூடும்.

இனிப்புச் சுவை மண்+நீர் பூதங்கள் கலந்து (உருவானது) தோன்றியது. ஐயமும் அதே பூதங்களின் கலவையால் தோன்றியது தான் என்பதனால், இனிப்புச்சுவை ஐயம்






வளர பயன்படும். அல்லது ஐய நோய்க்குக் காரணமாகும். அதற்கு மாற்றுச் சுவையாக உவர்ப்புச் சுவை (உப்பு)யைப் பயன்படுத்தினால் ஐயம் கட்டுப்படும் அல்லது குறையும். உப்புச்சுவை தீப்பூதம் சேர்ந்தது என்பதால் நீர்ச்சுவையான ஐயம் கட்டுப்படும். அதுபோல், புளிப்புச் சுவை, தீச்சுவை (உப்பு)யால் வந்த நோய்க்கு வழங்கினால் அந்நோய் மிகுந்து வளரும். இதற்கு தீயின் எதிர்மாறான (நீர்+ மண் அல்லது மண் + காற்று) சுவையுடைய பொருள்களைப் பயன்படுத்தினால், தீயால் வந்த நோய் கட்டுப்படும் எனலாம்.

இனிப்பு, புளிப்பு, உப்பு இம்மூன்று சுவைகளும் வாதத்தால் வந்த நோயைக் கட்டுப்படுத்தும் (அ) தீர்க்கும். கார்ப்பு, துவர்ப்பு, கைப்பு இம்மூன்று சுவைகளும் ஐயத்தால் வந்த நோயைக் கட்டுப்படுத்தும். துவர்ப்பு, இனிப்பு, கைப்பு இம்மூன்று சுவைகளும் பித்தத்தால் வந்த நோயைக் கட்டுப்படுத்தும் என்றறியலாம். அதேபோல, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு ஆகிய சுவைகள் வாத நோயை வளர்க்கவும், வருவிக்கவும் காரணமாகும். புளிப்பு, கார்ப்பு, உப்பு ஆகிய சுவைகள் பித்த நோயை வளர்க்கவும், வருவிக்கவும் காரணமாகும். இனிப்பு, புளிப்பு, உப்பு ஆகிய சுவைகள் ஐய நோயை வளர்க்கவும் வருவிக்கவும் காரணமாகும்.

இச்சுவையின் அடிப்படையைக் கொண்டு நோயை அறியவும், நோயைத் தணிக்கவும் சித்த மருத்துவக் கோட்பாட்டு முறையால் கண்டறியப் பட்டுள்ளது.

**- தொடரும்**


துறைமுகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் சீனா பிற நாடுகளை சூறையாடும் பொருளாதார உத்திகளைக் கையாள்கிறது என அமெரிக்க அதிகாரி ஜோசப் டன்ஃபோர்டு என்பவர் குற்றம்சாட்டியுள்ளார். சீனா தனது பொருளாதாரத்தை வலுப்படுத்த பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. அதில் மிக முக்கியமானது One Belt, One Road என்ற திட்டம். இதன் மூலம் உலகம் முழுவதுமுள்ள தனது வர்த்தக சந்தைகளை இணைக்க சீனா திட்டமிட்டுள்ளது. இதற்காக தனது நட்புறவு நாடுகளில் பல்வேறு உட்கட்டமைப்பு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அமெரிக்க அரசின் தலைமை அதிகாரிகள் குழுவின் தலைவர் ஜோசப் டன்ஃபோர்டு சீனா குறித்து பல்வேறு தகவல்களை அமெரிக்க ராணுவத்துடன் பகிர்ந்துகொண்டுள்ளார்.

அவர் கூறியதாவது, பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தில் அரபிக் கடலில் குவடார் துறைமுகத்தை சீனா அமைத்து வருகிறது. சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போடப்பட்டுள்ள பல பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக பாகிஸ்தான் சுமார் 10 பில்லியன் டாலர் சீனாவுக்கு கடனாளியாக மாறியிருக்கிறது.

ஏற்கெனவே இலங்கை சீனாவுக்கு தர வேண்டிய கடனுக்காக அதன் ஆழ்கடல் துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு கொடுத்துள்ளது. மேலும், 70 சதவீத பங்கும் சீனாவின் கைகளில் உள்ளது. இதேபோல் மாலத்தீவு சீனாவுக்கு 1.5 பில்லியன் டாலர் கடனாளியாக உள்ளது. கட்டுமான திட்டங்களுக்காக இந்தக் கடன் தரப்பட வேண்டும். இது அந்நாட்டின்

# உலகை சூறையாடும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் சீனா:

## அமெரிக்க அதிகாரி குற்றச்சாட்டு





30 சதவீத ஜிடிபி ஆகும். சீனா தனது ஆதிக்கத்தை உலகம் முழுவதும் விரிவுபடுத்த இதுபோன்ற பொருளாதார உத்திகளைக் கையாண்டுவருகிறது. உட்கட்டமைப்பு, துறைமுகம் உள்ளிட்ட திட்டங்களைக் கடனில் செயல்படுத்திக்கொடுத்து அந்நாடுகளின் மீது தனது ஆதிக்கத்தை அதிகப்படுத்துகிறது சீனா. இது உலகை சூறையாடும் பொருளாதார நடவடிக்கை என அவர் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், நட்பு நாடுகளிடம் சீனா செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் எந்தவித சர்வதேச விதிமுறைகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு செயல்படவில்லை. அனைத்திலும் மீறல்களும் முறைகேடுகளுமே உள்ளன என்றார்.



சில உதாரணங்கள், ஆப்பிரிக்க கண்டத்தின் சீபூத்தீ (Djibouti) நாடு 2017-ல் அதன் ஜிடிபியில் 80 சதவீத அளவுக்கு சீனாவுக்கு கடனாளியாக உள்ளது. இதனால், சீனாவின் முதல் சர்வதேச ராணுவ தளவாடமாக அந்நாடு மாறியுள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்வடார் சீனாவுக்குத் தரவேண்டிய 6.5 பில்லியன் டாலர் கடனுக்குப் பதிலாக அதன் கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் 80 முதல் 90 சதவீதத்தை சீனாவுக்கு வழங்க முடிவு செய்துள்ளது. அர்ஜென்டினா சீனாவுக்கு தன்னுடைய நிலத்தை 50 ஆண்டுகளுக்கு வரி இல்லாத குத்தகையாக விட்டுள்ளது. அந்த இடத்தில்தான் சீனா தனது ராணுவ தளத்தை அமைத்துள்ளது. இந்த ராணுவ தளத்தை கண்காணிக்க அர்ஜென்டினாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மேலும் சீனா, கடல் வழியிலும், தரை வழியிலும் பல்வேறு ராணுவ நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

சீனாவின் இந்த தந்திரமான பொருளாதார போக்கு விரைவில் கவனத்துக்கு உட்படுத்தப்பட்டு, அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் அமெரிக்க இராணுவத்தின் மீது அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று டன்ஃபோர்டு எச்சரித்துள்ளார்.

**- அகிலாண்டேஸ்வரி**



# சிந்தனை முத்துக்கள்






என்னை கேவலமாக
பார்த்து சென்ற
பணக்காரர்களெல்லாம்
மழை வெள்ளத்திற்கு
அடைக்கலம் தேடி
இன்று என்னிடம்
தஞ்சம்

நான் அரசுப்பள்ளி
(கார்பரேஷன் ஸகூல்)




வாழ்க்கையில சந்தோஷம் மட்டும் Short film மாதிரி டக்குன்னு முடிஞ்சிருது...



கருமம் இந்த பிரச்சனை மட்டும் English படம் மாதிரி 7 வது ,8 வதுன்னு Part Part டா வந்துகிட்டே இருக்கு....

நமக்கு மிக
நெருக்கமானவர்களுக்கு
மட்டுமே
தெரியும் நம்மை எங்கே
அடித்தால் வலிக்கும் என்று
ஆகையால்..
எதிலும் கவனம் தேவை..






"நீ எத்தனை பாவம் வேண்ணாலும் செஞ்சுக்கிட்டே இரு.. ஆண்டவன் முதல்ல உன்னை ஒண்ணும் செய்ய மாட்டான்.. ஆனா நீ என்னைக்கு உன்னோட ஆட்டத்தை நிறுத்திட்டு போதும்.. என்று ஓய்வு எடுப்போம்னு ஒதுங்கும்போதுதான் ஆண்டவன், அவனோட ஆட்டத்தை ஆரம்பிப்பான்..."!




கருவுற்றால் ஒரு குழந்தைக்கு
மட்டும் தான் 'அன்னை'யாக
முடியும்...
ஆனால்,
கருணையுற்றால்
ஆயிரம் குழந்தைகளுக்கு கூட
'அன்னை'யாக முடியும்....
- அன்னைதெரசா


"உங்க பையனை ஆர்கானிக் கிளாஸ் ரூம்ல போட்டுக்கலாமா? கொஞ்சம் ஃபீஸ் அதிகமாகும்"
"அப்படினா?"
"மரத்தடியில பாடம் சொல்லிக்கொடுப்பாங்க!"


எவ்ளோ சாரி கேட்டும் மனைவி
பேசலையா?...
நேரா கிச்சனுக்கு போய் எல்லா
டப்பாவோட மூடியையும் நல்லா
டைட்டா மூடிட்டு வந்து பேசாம
பெட்ல படுத்துக்கனும்....


நோட்டீஸ்
ஒட்டாதீர்!
சரி
ஒட்டமாட்டோம்
வீட்டு ஓனர்


ஹோட்டல் ல பார்சல் சொல்லிட்டு
நிக்கும்போது
புல்லட் ல வந்த பார்ட்டி ஒருத்தர் " நாலு
புரோட்டா வ பிச்சு போட்டு சால்னா வ
ஊத்தி ஊற வச்சு பார்சல் கட்டு " ன்னார்.
வித்தியாசமான ஸ்டைலா இருக்கே னு ,
எனக்கும் அதே டைப் ல
பார்சல் கட்டு தம்பி ன்னேன் .
கிளம்பும் போது புல்லட் பார்ட்டி கிட்ட ,
" சார் இது டேஸ்டா இருக்குமா " னு
கேட்டதுக்கு ,
"யாருக்குத் தெரியும்.
இது எங்க வீட்டு நாய்க்கு வாங்கிட்டு
போறேங்கறார் .


நாம் வாழும்போது யாரை
சிரிக்க வைக்கிறோமோ
அவர்கள்தான்
நாம் இறக்கும்போது
அழுகிறார்கள்..
நாம் வாழும்போது
யாரை அழ வைக்கிறோமோ
அவர்கள்தான்
நாம் இறக்கும்போது
சிரிக்கிறார்கள்..!!


என் வேலை முடியும் வரை, நீ
ஓர் கல், நான் ஓர் சிற்பி. என்
வேலை முடிந்தவுடன், நீ ஓர்
கடவுள், நான் ஓர்
தீண்டத்தகாதவன்.

# தியாகிகளின் சிலையும் மூடல்

மறைந்த தேசிய தலைவர்களின் சிலை களை மூடக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், தேர்தல் ஆணையம் தெளிவாக உத்தரவு பிறப்பிக் காததால், மாவட்டங்களில் தேர்தல் அதிகாரி கள் சிக்கலில் தவித்து வருகின்றனர். மக்களவை மற்றும் சட்டப்பேரவை இடைத்தேர்தலை முன்னிட்டு, அரசியல் கட்சிகளின் கொடிகள், சின்னங்கள் பொறிக்கப்பட்ட கொடிக்கம்பங்கள், வளை வுகள் மற்றும் தேர்தலில் மக்கள் மனதில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான சிலைகளும் மூடப்படுவது வழக்கம்.

இதற்கிடையில், கடந்த 2011-ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் திராவிடர் கழகம் சார்பில், தேர்தலை காரணம் காட்டி பெரியார் சிலையை மூடக்கூடாது என மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மனுவை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம் இடைக் கால தடை விதித்தது. தொடர்ந்து நடந்த இந்த வழக்கில், கடந்த பிப்.28-ம் தேதி நீதிபதி வி.பார்த்திபன் “மறைந்த தேசத் தலைவர் மற்றும் பெரியார் சிலைகளை தேர்தலுக்காக மூடக்கூடாது” என தீர்ப் பளித்து இந்த வழக்கை முடித்துவைத்தார்.

இந்நிலையில், கடந்த மார்ச் 10-ம் தேதி நாடு முழுவதும் மக்களவைத் தேர்தல் தேதி கள் அறிவிக்கப்பட்டன. அன்றே தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் சிலைகளை மூடுவதற்கான உத்தரவுகளை வழங்கினர். இதையடுத்து முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரது சிலைகள் துணி யால் மூடப்பட்டன. சென்னை உள்ளிட்ட பல் வேறு பகுதிகளில் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி சிலைகள், அண்ணா, காம ராஜர் சிலைகள் மறைக்கப்பட்டுள்ளன. ஆனால், சென்னையில் பிரதான பகுதிகளில் உள்ள அண்ணா சிலைகள் மறைக்கப்படவில்லை. இதேபோல் விழுப்புரம் மாவட்டத்தில் அம்பேத்கர் சிலை மூடப்படவில்லை.

அதேநேரம் சென்னை அடுத்த குரோம் பேட்டையில் ஏனைய தலைவர்களோடு தியாகி பரணி நெல்லையப்பர் சிலையையும் மறைத்து



வைத்துள்ளனர். மறைந்த தேசிய தலைவர்கள் சிலையை மூடக்கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் இவ்வாறு நிகழ்ந்துள்ளது.

இதுதொடர்பாக உள்ளாட்சித்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, “தேர்தல்

நடத்தை விதிகள் அமலுக்கு வந்த நிலையில், சிலைகளை மூட உத்தரவு வந்தது. சிலைகளை மூடிவிட்டோம்“ என்று பதிலளித்தார். மற்றொரு அதிகாரியோ, “சிலைகளை மூடிவிட்டோம். தற்போது பிரச்சினை ஏற்பட்டதால், தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரியிடம் விளக்கம் கேட்டுள்ளோம்“ என்றார். வேறொரு அதிகாரியோ “காந்தி, நேரு, பெரியார், அப்துல்கலாம் தவிர மற்றவர்கள் சிலைகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான தகவலை தெரிவித்தனர்.

இதுதொடர்பாக, தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூவிடம் கேட்டபோது, ‘‘பழம்பெரும் தலைவர்களின் சிலைகள் மூடப்படுவதில்லை. அதற் கான குறிப்பிட்ட வரைமுறைகள் விதிக்கப் படவில்லை. அதேநேரத்தில் தற்போது தேர் தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் மற்றவர்கள் சிலைகள் மூடப்படுகின்றன’’ என்றார்.

தேர்தல் ஆணையம் சமீபத்தில் வெளியிட்டுள்ள நடத்தை விதிமுறைகளில், ‘‘பிரதமர், அமைச்சர்கள், முதல் அமைச் சர்கள் மற்றும் பிற அரசியல் நிர்வாகிகளின் புகைப்படங்களை காட்சிப்படுத்தக் கூடாது. அதேவேளையில் கடந்த கால தேசிய தலைவர்கள், கவிஞர்கள் மற்றும் முக்கியத் துவம் வாய்ந்த வரலாற்றுத் தலைவர்கள், குடியரசுத் தலைவர் மற்றும் ஆளு நர்கள் சிலைகளுக்கு இந்த உத்தரவை பயன்படுத்தக் கூடாது. மேலும், ஏதேனும் சந்தேகம் இருந்தால் இவ்விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கும் முன், மத்திய, மாநில அரசுகளின் நேரடி ஆட்சிப்பகுதியின் தலைமை தேர்தல் அதிகாரியின் ஆலோச னையை பெறலாம்“ என்று கூறப்பட்டுள்ளது.

இந்த விளக்கம்தான் அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டுள்ளது. தெளிவான விளக்கம் இல்லாததால் அந்தந்த பகுதி தேர்தல் அலுவலர்கள் சிக்கலில் தவித்து வருகின்றனர்.

**- அகிலாண்டேஸ்வரி**

---


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை * அருணை முரசு

## Cell : 93821 33334 / 044 - 48615321

**Email : writermouriyan@gmail.com**

பல ஆண்டுகளாகக் கட்சிப் பணியாற்றுபவர்கள் இருக்க, எழுத்தாளர்களை முன்னிறுத்துகிறார்களே என்று கட்சிகளுக்குள்ளேயும் கேட்க முடிகிறது. போட்டியிடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வேட்பாளர்களின் முழு விவரங்களையும் தெரிந்துகொள்ளாமல் அவர்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியாது.

# தேர்தல் களம் புகும் தமிழ் எழுத்தாளர்கள்!

**தமிழச்சி தங்கபாண்டியன்:** தென்சென்னை தொகுதிக்கு திமுக வேட்பாளராக தமிழச்சி தங்கபாண்டியன் நிறுத்தப்பட்டிருக்கிறார். 2000-களில் 'கணையாழி' உள்ளிட்ட இலக்கிய இதழ்களில் த.சுமதி என்ற இயற்பெயரில் தமிழச்சியின் கவிதைகள் வெளியாகத் தொடங்கின. ஈழ எழுத்தாளர் எஸ்.பொ.வின் 'மித்ர' பதிப்பகம்தான் அவரது முதல் கவிதைத் தொகுப்பை வெளியிட்டது. ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற தமிழச்சி, தனது முனைவர் பட்ட ஆய்வுக்காக ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நாடகங்களையும் அவர்களது அலைந்துழல்வு வாழ்க்கையையும் ஆய்வுத் தலைப்பாகத் தேர்ந்தெடுத்ததும் தற்செயலானது அல்ல. ஈழத்தில் நடந்த இறுதிக் கட்டப் போரைக் கண்டித்துக் கொட்டும் மழையில் நடந்த மனிதச் சங்கிலி பேரணியில் பரிதவிப்போடு நின்றிருந்த தமிழச்சியை அருகிருந்தவர்கள் அறிவார்கள்.



ராணிமேரி கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றிய தமிழச்சி, கட்சிப் பணிகளுக்காகவே அந்தப் பணியிலிருந்து விலகினார். ஒருவேளை அந்தப் பணியில் தொடர்ந்திருந்தால், துணைவேந்தர் போன்ற பதவிகளுக்கும்கூட அவர் உயர்ந்திருக்க முடியும். அவர் ஒரு கவிஞராகவே பெருமளவு அறியப்பட்டிருக்கிறார். சமகாலத்து கவிஞர்களின் படைப்புகளைக் குறித்து நவீன இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் விரிவான விமர்சனக் கட்டுரைகளை எழுதியவர் அவர். கடந்த 15 ஆண்டுகளாகச் சென்னையில் நடந்த இலக்கியக் கூட்டங்களையெல்லாம் கருத்தரங்குகளாக மாற்றினார் என்றும் சொல்லலாம். 'பூனைகள் சொர்க்கத்துக்குச் செல்வதில்லை' என்ற தலைப்பில் வெளியான அந்தக் கட்டுரைத் தொகுப்பு தமிழ் நவீனக் கவிதைகள் குறித்த முக்கியமான கட்டுரைத் தொகுப்பு. அரசியல் குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவர் என்றாலும் தனக்கென தனி அடையாளத்தை உருவாக்கிக்கொண்டவர் தமிழச்சி.

**து.ரவிக்குமார்:** விசிக சார்பில் விழுப்புரத்தில் போட்டியிடும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் து.ரவிக்குமார் ஏற்கெனவே காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். அப்போது சட்டமன்ற விவாதங்களில் அவர் எவ்வளவு காத்திரமாகச் செயலாற்றியிருக்கிறார் என்பதற்கு அவரது சட்டமன்ற உரைத் தொகுப்பே சாட்சியாக நிற்கிறது. ஏற்கெனவே திருவள்ளூர் மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிவாய்ப்பைத் தவறவிட்டவர் இவர்.



தமிழக அறிவுலகின் முதன்மையான ஆளுமைகளில் ஒருவர் ரவிக்குமார். கல்லூரி மாணவப் பருவத்திலேயே அ.மார்க்ஸ், பொ.வேல்சாமி ஆகியோருடன் இணைந்து 'நிறப்பிரிகை' இதழில் பங்கெடுத்தவர். உலகச் சிந்தனையாளர்களின் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர். வழக்கறிஞராக, மனித உரிமைச் செயற்பாட்டாளராக அவர் ஆற்றியிருக்கும் பங்களிப்புகள் முக்கியமானவை. 'தலித்' சிற்றிதழை நடத்தியவர், தற்போது 'மணற்கேணி' ஆய்விதழை நடத்திக்கொண்டிருக்கிறார்.

தமிழ் உயராய்வு மையங்களுடன் இணைந்து பங்காற்றியவர். இலக்கிய உலகத்துக்கும் ஆய்வுலகத்துக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதில் தீவிர முனைப்பு காட்டி வருபவர். கலை இலக்கிய அரசியல் விமர்சகராக மட்டுமின்றி மொழிபெயர்ப்பாளராகவும் கவிஞராகவும் தொடர்ந்து இயங்கிவருபவர்.

**சு.வெங்கடேசன்:** சாகித்ய அகாடமி விருது பெற்ற ‘காவல் கோட்டம்’ நாவலாசிரியராகத்தான் சு.வெங்கடேசனைத் தமிழகம் கண்டுகொண்டிருக்கிறது. ‘காவல் கோட்ட’த்தின் இடத்தில், இப்போது ‘வேள்பாரி’. ஆனால், கல்லூரி மாணவப் பருவத்திலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகப் பணியாற்றி வருபவர் அவர். ஏறக்குறைய 25 ஆண்டுகள். உத்தப்புரம் சாதி தடுப்புச் சுவர் இடிப்பு உள்ளிட்ட தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் பல்வேறு களப் போராட்டங்களில் பங்கெடுத்துக்கொண்டவர். கம்யூனிஸ்ட் கட்சிகளின் முழுநேர உறுப்பினர்களுக்கே உரிய வயிற்றுப் புண்ணும் முதுகுவலியும் இவருக்கும் உண்டு. தொடர் பட்டினியும் இடைவிடாத இருசக்கர வாகனப் பயணங்களும் ஒரு முழுநேர கட்சி ஊழியருக்குக் கொடுக்கும் பரிசுகள் அவை. மதிய வேளைகளில் நண்பர்கள் பிரியாணி சாப்பிட, தயிர் சாதத்தோடு பசியாற்றிக் கொள்பவர். இரவு நேரங்களில் தங்கும் அறைகளில் முதுகுவலியைத் தவிர்ப்பதற்காக வெறுந்தரையில் தலையணை இல்லாமல் உறங்கும் பழக்கம்கொண்டவர். தமுஎகச மேடைகளில் கவிஞராக அறிமுகமாகி, அதன் மாநிலத் தலைவராக உயர்ந்தவர். தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் இலக்கியக் கூட்டங்களில் பங்கேற்றவர்.



**ஜோதிமணி:** காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியல் இன்னும் வெளியாகவில்லை. கரூர் தொகுதியில் ஜோதிமணி போட்டியிடுவார் என்று தெரிகிறது. எழுத்தாளராக மட்டுமின்றி முன்னணி வார இதழ்களில் பத்திரிகையாளராகவும் பணியாற்றிய அனுபவம் உள்ளவர் அவர். இந்திரா என்ற பெயரில் அவர் எழுதிய சிறுகதைகள், 15 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தின் முன்னணி வார இதழ்களில் வெளிவந்தவை. மறைந்த பத்திரிகையாளர் ஞாநியால் வழிநடத்தப்பட்ட இளம் தலைமுறை பத்திரிகையாளர்களில் அவரும் ஒருவர். காங்கிரஸ் கட்சியின் சார்பாக, உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்.



இப்படி எழுத்தாளர்கள், அதுவும் மக்கள் பணியிலும் எழுத்துப் பணியிலும் ஒருசேரப் பங்கெடுக்கும் எழுத்தாளர்கள் தேர்தல் களத்துக்கு வந்திருப்பது, அறுபதுகளின் அரசியல் சூழலை நினைவுபடுத்துகிறது. அப்போது தேர்தலில் போட்டியிட்ட இளைஞர்களில் பெரும்பாலானோர் எழுத்தாளர்களாகவும் இருந்தார்கள். தேர்தலில் போட்டியிடாத எழுத்தாளர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் மேலவையில் இடங்கள் காத்திருந்தன. நாளடைவில், அந்தக் காட்சிகள் மாறிப்போயின.

இலக்கியவாதிகளையும் அறிவு ஜீவிகளையும் கௌரவிப்பதில் அதிமுகவும் பின்தங்கிவிடவில்லை என்பதையும்கூட இந்த நேரத்தில் நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கிறது. எழுத்தாளர் வலம்புரி ஜானை இரண்டு முறை மாநிலங்களவை உறுப்பினராகவும் மேலவை உறுப்பினராகவும் இடம்பெறச் செய்தவர் எம்ஜிஆர். மேலவையைக் கலைத்தபிறகு மபொசியை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக்கியவர், தனது ஆட்சிக்காலம் முழுவதிலும் பல்வேறு தமிழறிஞர்களுக்கு நூற்றாண்டு விழாக்களை நடத்தியவர், மதுரையில் நடந்த உலகத் தமிழ்மாநாட்டின் அறிஞர் குழுவில் மு.கருணாநிதியையும் ஒருவராக இடம்பெறச் செய்தவர் என்பது போன்ற பெருமைகளும் எம்ஜிஆருக்கு உண்டு.

**- அகிலாண்டேஸ்வரி**

# இணையத்தின் வரலாறு

தற்போதைய கணினி வலையமைப்பு மைய கணினி அமைப்பு மாதிரியை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இரண்டு தனித்தனியாக உள்ள வலையமைப்புகளுக்கு இடையே, வலையமைப்பினுடைய இணைப்புக் கொள்கைகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள், நவீன எண்முறை வலையமைப்பினுடைய பொதி நிலைமாற்றம் குறித்த முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது. இந்த ஆய்வு முயற்சிகளில் டொனால்ட் டேவிஸ் (NPL), பால் பாரனின் ரெண்ட் கார்ப்ரேஷன் மற்றும் MIT மற்றும் UCLA யிலிருந்து லியானார்ட் கிளைன்ராக் உள்ளிட்ட ஆய்வு நிறுவனங்கள் பங்கேற்றன. இந்த ஆய்வானது 1960 களின் பிற்பகுதி மற்றும் 1970 களில் இருந்த ஆர்பாநெட் மற்றும் X.25 உள்ளிட்ட சில நெறிமுறைகளின் பொதி நிலைமாற்ற வலையமைப்பின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமைந்தது.

கூடுதலாக, யுனிக்ஸ் டு யுனிக்ஸ் காபி (UUCP) மற்றும் ஃபிடோநெட் உள்ளிட்ட பொது அணுகுமுறை மற்றும் பொழுதுபோக்கு வலையமைப்பு முறைகளின் புகழும் வளர்ச்சியுற்றது. இவைகள் தற்பொழுதும் பிரிந்து தனித்தனி வலையமைப்புகளைக் கொண்டுள்ளன. இவைகள் தங்கள் வலையமைப்புகளிடையே வரையறுக்கப்பட்ட நுழைவாயில்களை மட்டும் வழங்கிவருகின்றன. இது பொதி நிலைமாற்றி செயல்பாடுகளிலிருந்து முன்னேற்றமடைந்த வலையமைப்புகளின் நெறிமுறைக்கு வழி காட்டியாக அமைந்தது. இதில் பல்வேறுவகையான வலையமைப்புகள் தங்களுக்குள் இணைந்து உயர்தர கட்டமைப்புடைய வலையமைப்புகளாக மாற்றம் பெற்றன. எளிய பொதுவான வலையமைப்பு முறையை வரையறுத்தால், அதன் இணைய நெறிமுறைத் தொகுதியானது, அதன் வலையமைப்பு கொள்கையின் இருப்பு சார்ந்த நடைமுறையிலிருந்து தனித்திருக்கும்.

1982 இல் அதிகாரபூர்வமாக நடைமுறைபடுத்தப்பட்ட நிலையான நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு பரவத் துவங்கிய இணைய வலையமைப்பானது, உலக வலையமைப்புக்கான சிந்தனையை உருவாக்கியது. இதுவே இணையம் என்றழைக்கப்பட்டது. மேற்கத்திய உலகம் இந்த நவீனத் தொலைதொடர்பு வலையமைப்புகளை ஏற்றுக்கொண்டு விரைவாக இணைத்தொடுப்புகள் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்கு பிறகு உலக வலையமைப்புக்கான பன்னாட்டளவிலான நிலையான நடைமுறைகள் உலகின் பிற பகுதிகளுக்கும் ஊடுருவத் துவங்கியது.வளர்ந்த நாடுகள் மற்றும் மூன்றாம் உலக நாடுகளுக்கிடையேயான இதனுடைய வேறுபட்ட வளர்ச்சியானது இன்றுவரையிலும் அதன் எண்ம இடைவெளி தொடர்வதற்கு காரணமாக உள்ளது.



வணிகமயமாக்கலைத் தொடர்ந்து தனியாரால் இயக்கப்படும் இணைய சேவை வழங்கிகள் 1980 களில் அறிமுகப்படுத்தப்பட்டன, மற்றும் 1990 களில் அதன் பயன் சார்ந்த புகழ் காரணமாக பண்பாடு மற்றும் வணிகத்தில் ஏற்பட்ட கடுமையான தாக்கத்தால் இணையம் விரிவடைந்தது. இந்த வளர்ச்சியில், மின்சார அஞ்சல் மூலம் நடைபெற்ற உடனடி தகவல் பரிமாற்றம் (மின்னஞ்சல்), உரைநடையை அடிப்படையாகக் கொண்ட விவாதக் குழுக்கள் மற்றும் உலகளாவிய வலை ஆகியனவும் அடங்கும். இந்த டாட்-காம் குமிழி இன் கண்டுபிடிப்பானது புதியதாக சந்தையில் ஏற்படும் விலையேற்றம் மற்றும் விலை வீழ்ச்சி ஆகியவற்றை முதலீட்டாளர்கள் கணிப்பதற்கு வழிகாட்டியாக அமைந்தது. இக்குறை இருப்பினும், இணையம் தொடர்ந்து வளர்ச்சியுற்றது.

இணையத்தின் கதை 1969-ம் ஆண்டில் தொடங்கியது என்பதும் 'அர்பாநெட்' எனும் ஆய்வுத் திட்டமே அதன் தொடக்கப் புள்ளி என்பதும் பரவலாகத் தெரிந்த விஷயம்தான். மேலும், இணையம் ராணுவ ஆய்வுத் திட்டமாக உருவானதே. அதற்கு அமெரிக்கா, சோவியத்

ரஷ்யா இடையிலான பனிப்போர் முக்கியக் காரணம். அணு ஆயுத போர் மூண்டு, எந்தப் பகுதி தாக்கப்பட்டாலும் மற்ற பகுதி பாதிக்கப்படாமல் இயங்கக்கூடிய ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்க வேண்டும் என்பது இணையத்துக்கான முக்கிய ஊக்கமாக அமைந்தது. இதில் மாறுபடுபவர்களும் இருக்கின்றனர்.

ஆனால், இணையத்துக்கான கருத்தாக்கம் இவற்றுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே அங்கும் இங்கும் கீற்றுகளாக உதயமாக தொடங்கி விட்டது. இணையம் என்பதற்கான தெளிவான ஸ்தூல வடிவம் யார் மனத்திலும் இல்லை என்றாலும், அதை நோக்கிய பாதைக்கான வழிகாட்டுதலைக் கொண்டிருக்கும் முக்கியச் சிந்தனைகளை கணினி மேதைகள் பலர் முன் வைத்திருக்கின்றனர்.

இந்தச் சிந்தனைகள் அவை முன்வைக்கப்பட்ட காலத்தில், இவை எல்லாம் எப்படிச் சாத்தியம் என வியக்கக்கூடியதாகவும் அறிவியல் புனைகதைச் சங்கதிகளோ மயங்க வைப்பதாகவும் இருந்திருக்கின்றன. மேதைகளின் தீர்க்கதரிசனமும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் இணையம் படிப்படியாக உருவாக வழிசெய்தது. இணையம் உருவான கதையைச் சுருக்கமாகப் பார்ப்பதற்குமுன், இணையத்தின் பூர்வ கதையை, அதன் கருத்தாக்க அடித்தளத்தைப் பார்க்கலாம்.

இணையம் என்பதை அடிப்படையில் கணினிகளின் வலைப் பின்னல் எனப் புரிந்துகொள்ளலாம். ஒரு கணினி, வலைப் பின்னலில் உள்ள இன்னொரு கணினியுடன் பேசிக்கொள்வதன் மூலம் தகவல் பரிமாற்றமும் இணையம் சார்ந்த இன்ன பிற சேவைகளும் சாத்தியமாகின்றன. ஆனால், இணையத்தை






உருவாக்கலாம் என்று எந்த ஒரு தனிநபரும் திட்டமிட்டு இதற்கான பணியில் ஈடுபடவில்லை.


வெவ்வேறு காலகட்டத்தில் தொழில்நுட்பத் தொலைநோக்குடன் பலரும் தங்கள் துறையில் ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இப்படிப் பல்வேறு புள்ளிகளில் ஒன்றிணைந்த கருத்தாக்கங்களும் சிந்தனை வடிவங்களுமே இணையம் எனும் வலைப்பின்னலாகப் பரிணமித்தது. சொல்லப்போனால், இணையத்தை உருவாக்குவதற்கான தொழில்நுட்பங்கள் உருவாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே, பல விஞ்ஞானிகள் உலகளாவிய வலைப்பின்னலை எதிர்பார்த்தனர். மின்சாரக் கண்டுபிடிப்பில் எடிசனின் போட்டியாளராகத் திகழ்ந்த நிக்கோலா டெஸ்லா, உலகளாவிய வயர்லெஸ் அமைப்பைக் கற்பனை செய்தார்.

அறிவியல் புனைவுக் கதை எழுத்தாளரான எச்.ஜி.வெல்ஸ், 'உலக மூளை' என்பதைக் கற்பனைசெய்து எழுதினார். 'மொத்த மனித நினைவுத் திறனும், ஒவ்வொரு மனிதரும் அணுகும் வகையில் உருவாக்கப்படலாம். குறுகிய காலத்தில் இது உருவாக்கப்படவும் செய்யும்" என 1936-ல் அவர் எழுதினார். அதற்கு முன்னர், 1910-ம் ஆண்டில் பெல்ஜியத்தைச் சேர்ந்த பால் ஆட்லெட் (Paul Otlet) என்பவர், ஹென்றி லா பாண்டென் (Henri La Fontaine) என்பவருடன் இணைந்து உலக அறிவுக்கான மையக் களஞ்சியம் போன்ற ஒரு கருத்தாக்கத்தை முன்வைத்தார். இதற்காக இவர்கள் 'முண்டேனியம்' (Mundaneum) எனும் கருத்தாக்கத்தை உருவாக்கினர். தகவல்களை வகைப்படுத்துவதற்கான உலகளாவிய முறையாக இது அமைந்தது.

**- M. தரணி**

# மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பாதகமாகும் வினாவங்கி!

கல்வி ஆண்டுக்கான பாடங்களைப் படித்துத் தேர்வு எழுதுவது என்பதே நடைமுறை. ஆனால், ஒரு மதிப்பெண், இரண்டு மதிப்பெண் என மதிப்பெண் வாரியாக உள்ளடக்கத்தைத் தொகுத்துத் தயாரிக்கப்படும் வினாவங்கி வகைப் புத்தகங்கள் வருகின்றன. இவை புத்தகம் படிக்கும் பழக்கத்திலிருந்து வினாவங்கியை மட்டும் படித்துத் தேர்வு எழுதும் பழக்கத்துக்கு மாணவர்களைத் தள்ளியுள்ளன.





கடந்த காலத்திலும் இப்படியான வினாவங்கிப் புத்தகங்கள் உண்டு. என்றாலும், கடந்த மூன்று ஆண்டுகளாக வினாவங்கி சார்ந்து தேர்வு எழுதுவது அதிகரித்துள்ளது. பாடப் புத்தகங்களைப் படித்தல், வினாவங்கியில் பயிற்சி என்ற நிலை மாறி, புத்தக வாசிப்பை முற்றிலும் கைவிட்டு வினாவங்கியை மட்டும் படிக்கும் மாணவர்களாக அநேகர் இன்று மாறி வருகின்றனர். இந்த நிலை மாணவர்களின் கல்வித் திறனை மழுங்கடிக்கும் செயல்.

வினாவங்கி மோகத்துக்குப் பெற்றோர்களும் காரணமாகின்றனர். பெற்றோர்களே உங்கள் குழந்தைகள் புத்தகம் வாங்க வேண்டும் என்று சொன்னால் ‘என்ன புத்தகம், எதற்காக அந்தப் புத்தகம் வேண்டும்?’ என்ற அடிப்படைக் கேள்விகளையாவது கேட்டுவிட்டுத் தேவை எனில் மட்டும் புத்தகங்களை வாங்கிக் கொடுங்கள்.

தரமான பல நல்ல நூல்களைப் பதிப்பகங்கள் வெளியிட்டுக்கொண்டே இருக்கின்றன. அவற்றை வாங்கிப் பயன்பெறலாம். வினாவங்கி போன்ற புத்தகங்கள் வெறும் வினாவுக்கு விடையளிக்கும் இயந்திரமாக மாணவர்களை மாற்றுபவை. இதனால் எந்தக் கருத்து குறித்த புரிதலுமின்றி மேலோட்டமாகத் தகவலைச் சேகரிக்கும் போக்கு மட்டுமே அதிகரிக்கும். இது மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பாதகமானது.

வியாபார உத்திகளின் பலிகடாக்களாக மாணவர்கள் மாறுவதைத்தான் இது காட்டுகிறது. எந்தப் பொருளானாலும் அதன் தேவை, பயன்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வாங்கும் பழக்கத்தைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பது அவசியம்.

**- M. சத்யராஜ்**



# பெண்ணே நீ

- கவிஞர் நிவேதிதா



பாவப்பட்ட
பெண்ணே!!

கழிப்பறையில்
கவனம்...!

குளியறையில்
கவனம்...!

படுக்கையறையில்
கவனம்...!

பள்ளியறையில்
கவனம்...!

அலுவலகறையில்
கவனம்...!

கோவில் கருவறையில்
கவனம்...!

பேருந்து பயணத்தில்
கவனம்...!

இரயில் பயணத்தில்
கவனம்...!

பாலூட்டும் அறையில்
கவனம்...!

மருத்துவறையிலும்
கவனம்...!

ஆடை மாற்றும் அறையிலும்
கவனம்...!

நீ பெண் என்று தெரிந்து கொண்டால்
தாயின் கருவறையிலும்
கவனமாக இரு!

பெண்ணே நீ
கடந்து போகும்
பாதையை கவனிப்பாயா...?

சில காம வெறிநாய்களின் கண்களை
கண்காணித்து கொண்டு இருப்பாயா...?



பெண்ணின் கவனத்திற்க்கான
பதிவு இல்லை...!

ஆணின் அவமானத்திற்க்கான
பதிவு...!

அப்பான்னு நினைச்சேன்
அசிங்கமாய் தொட்டான்...!

சகோதரன்னு பழகினேன்
சங்கட படுத்தினான்...

மாமான்னு பேசினேன்
மட்டமாய் நடந்தான்...!

உறவுகள் அனைத்தும்
உறவாடவே அழைக்கின்றன...!

பாதுகாப்பை தேடி
பள்ளிக்கு சென்றேன்...!

ஆசிரியனும் அரவணைத்து
மறுக்காதே மதிப்பெண் குறையும் என்றான்...!

நட்பு கரமொன்று நண்பனாய்
தலைகோதி தூங்கென்றான்...!
மரத்த மனம் மருண்டு சுருண்டு
தூங்கையில் கைபேசியில் படமெடுத்தான்
அவனும் ஆண்தானே...!

கதறி அழுது கடவுளிடம் சென்றேன்
ஆறுதலாய் தொட்டு தடவி
ஆண்டவன் துணையென்றான் பூசாரியான்..!

அலறி ஓடுகிறேன்...
எங்கே போவேன்?

சமத்துவம் வந்ததென
சத்தமாய் கூறுகின்றனர்....!
பெண்னை பெண்ணாக பார்க்காமல்
மனிதராய் பார்ப்பது எக்காலம்?

பாவிகளின் பாலியல் வன்முறை
என்று ஓயுமோ??

# இப்படியும் இருக்காங்க!

ஊரில் உள்ள சின்ன ஹோட்டல் ஒன்றில், கையில் தூக்கு வாளியுடன். ஒரு 10 வயது சின்னக் குழந்தை, “அண்ணா... அம்மா 10 இட்லி வாங்கி வர சொன்னாங்க. காசு நாளைக்கு தருவாங்களாம்” என்றது. ஹோட்டல் நடத்துபவர், “ஏற்கனவே கணக்கு நிறைய பாக்கி இருக்கு , அம்மாக்கிட்டே சொல்லுமா. இப்போ வாங்கிட்டுப்போ. தூக்கு வாளியை தா, சாம்பார் ஊத்தி தாரேன்” என்றார்.

இட்லி பார்சலையும், சாம்பார் நிறைத்த தூக்குவாளியையும் அந்த குழந்தையிடம் தருகிறார். குழந்தை, “சரி... அம்மாட்ட சொல்றேன்... போயிட்டு வரேன் அண்ணே” என்றபடியே குழந்தை கிளம்பிவிட்டாள். அந்த கடையில் ஒருவர் வாடிக்கையாய் சாப்பிடுவது வழக்கம். ஆதலால் கேட்டே விட்டார். “நிறைய பாக்கி இருந்தா ஏன் மறுபடியும் குடுக்குறீங்க?”



ஹோட்டல் முதலாளி, “அட சாப்பாடு தானே சார்... நான் முதல் போட்டுத்தான் கடை நடத்துறேன். இருந்தாலும் இது மாதிரி குழந்தைகள் வந்து கேட்கும்போது மறுக்க மனசு வரல சார்... அதெல்லாம் குடுத்துடுவாங்க. என்ன... கொஞ்சம் லேட் ஆகும். எல்லாருக்கும் பணம் சுலபமாவா சம்பாதிக்கமுடியுது? குழந்தை பசியால் கேட்டிருக்கும். அதான் சார், அனுப்பி இருக்காங்க. நான் குடுத்துடுவேன் அப்டிங்கற அவங்க நமபிக்கையை நான் பொய்யாக்க விரும்பல சார். நான் உழைச்சி தான் சம்பாதிக்கிற காசு. வந்துடும் சார்... ஆனா இப்போதைக்கு அந்த குடும்பம் சாப்பிடுதுல, அதுதான் சார் முக்கியம். நான் உணவு தரவில்லை என்றால், அந்த குழந்தை, தன் தாயுக்காக திருட போகும் அல்லது அந்த தாய், தன் குழந்தை பசிக்காக, தவறான பாதைக்கு செல்வாள். ஆனால், நான் நஷ்டபட்டாலும், இப்பொழுது நம் சமுகத்தில் நடக்க இருந்த, இரண்டு தவறுகளை தடுக்க முடிந்திருக்கிறது” என்றார்.


கடவுள் இல்லைன்னு யார் சார் சொன்னது? நாமும் இந்த வினாடியிலிருந்து, பிறருக்கு உதவி செய்து மனிதருள் மாணிக்கமாவோம்.

# பத்திரிகையாளர்களின் கூட்டமைப்பு

PRESS MEDIA
மக்கள் விசாரணை
அருணை முரசு ARUNAI MURASU தமிழ் மாத இதழ்
உண்மை. துணிவு. நேர்மை. அரசியல் தீர்ப்பு சமூகம், அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்
பீப்பிள் டுடே PEOPLE TODAY மக்கள் விழிப்புணர்வு தமிழ் மாத இதழ்
நமது நகரம்
அரசியல் முத்திரை தமிழ் மாத இதழ்
ரிப்போர்ட்டர் வேர்ல்ட்
அதிரடி குரல் (மாத இதழ்)
கடல் துளிகள் KADAL THULIGAL
உரிமை ரிப்போர்ட்டர் URIMAI REPORTER
வெற்றி யுகம் POLITICAL & CRIME MONTHLY
ரிப்போர்ட்டர் விஷன்
தொட்டில் செய்தி
நாற்காலி செய்தி
தமிழன் குரல்
திரை தீபம்
போலீஸ் ரிப்போர்ட்டர் குற்றப் புலனாய்வு இதழியல் & ஊடகவியல்
ஜித்தன்
சட்ட கேடயம்
நுண்ணறிவு புலனாய்வு இதழ்
பாக்கியம் சினிமா BAKKIYAM CINEMA TAMIL MONTHLY MAGAZINE
கடல்சிற்பி KADAL CHIRPI
முதல் தகவல் MUDHAL THAGAVAL
THE DECEMBER MAIL English Monthly
பேனா முள்
REPORTER FLASH
PRESS
அதிரடி தீர்ப்பு
நியூஸ் பிரிட்ஜ் NEWS BRIDGE
சென்னை மண்டல செய்திகள் CHENNAI MANDALA SEITHIGAL
புரசை எக்ஸ்பிரஸ் தமிழ் வார இதழ்
விழா முரசு
தொகுதி முரசு THOGUTHI MURASU
மூன்றாம் கண் moondram kan
உள்ளாட்சி சுடர் மாதமிருமுறை
முள்ளும் மலரும் Mullum Malarum
DAILY INDIA NEWS TV
ஸ்ரீ ஆஞ்சநேயா விஜயம்
VADAPALANI XPRESS Your Friendly Neighbourhood Newspaper
பல்லவன் முரசு
மக்கள் பார்வை Makkal Raajapaarvai
மண்ணின் குரல்
விழிப்புணர்வின் குரல்
மெய் எழுத்து உண்மையின் மறு பெயர் மாத இதழ்
தர்ம ராஜ்ஜியம் பல்சுவை மாத இதழ்
FINE TIME English & Tamil Weekly
புதுவை ஒளி PUDHUVAI OLI வார இதழ்
சிலந்தி வலை SILANTHI VALAI English & Tamil Monthly
மக்கள் விருப்பம் MAKKAL VIRUPPAM Tamil Monthly Magazine தமிழ் மாத இதழ்
திங்கள் மலர் ENLIGHT THE PEOPLE
வீரத்தலைமுறை
தொழில் பார்வை
அமுதம் ரிப்போர்ட்டர்
FACE NEWS
PEOPLE PLUS English & Tamil Weekly

# பணம் இருந்தால் அரசு வேலை

நாட்டில் பற்றியெரியும் பிரச்னையாக இருப்பது வறுமையும், வேலையின்மையும் தான். இந்தியாவில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் சுமார் 23.8 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. தமிழகத்தில் மட்டும் வேலைக்காக 84 லட்சத்து 64 ஆயிரத்து 136 பேர் வேலைவாய்ப்பகங்களில் பதிந்துவிட்டு காத்திருக்கின்றனர். இதில் 2.45 லட்சம் பேர் பொறியாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. படித்த படிப்புக்கேற்ற வேலை கிடைக்காததால், கிடைத்த வேலைக்குச் செல்லும் 18 முதல் 29 வயது வரம்புடைய இளைஞர்கள் தமிழகத்தில்தான் அதிகமாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.




தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் உருவாக்காதது தான் வேலையின்மைக்கு முதல் காரணம். இந்நிலையில், தமிழக அரசின் அரசாணை ஒன்று, இனி அரசு வேலை கிடைக்குமா என்ற அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழக அரசு பள்ளிகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் என்ற அளவில் ஊதியம் தரப்படுகிறது.

இதற்கிடையே சிறப்பு காலமுறை ஊதிய பணியிடங்களை காலமுறை ஊதியமாக மாற்றித்தரக் கோரி துப்புரவுப் பணியாளர்கள், 2014ல் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தனர். விசாரணையின் முடிவில், காலமுறை ஊதிய பலன்களை பணியாளர்களுக்கு வழங்க உயர்நீதிமன்றம் கடந்த ஆண்டு உத்தரவிட்டது. இதை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்தது. ஆனால், அந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதையடுத்து நீதிமன்ற தீர்ப்பின்படி துப்புரவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு, பணப் பலன்களை வழங்குவதாக தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.

இதுகுறித்து பள்ளி கல்வித்துறை முதன்மைச் செயலர் பிரதீப் யாதவ், ''இனிவரும் காலங்களில் 2012ம் ஆண்டு மார்ச் 2ம் தேதி வெளியிடப்பட்ட ஆணையின்படி உருவாக்கப்பட்ட அனைத்து துப்புரவாளர் பணியிடங்களும் நிரப்பப்படாது. அத்துடன் சிறப்பு காலமுறை ஊதியத்தில் நியமிக்கப்பட்ட 2,213 துப்புரவுப் பணியாளர்களின் ஓய்வுக்குப் பின் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாது. இனிமேல் துப்புரவுப் பணியிடங்கள் அவுட்சோர்சிங் மூலமாக மட்டுமே நிரப்பப்படும். இதற்கான ஆணைகள் தனியாக பிறப்பிக்கப்படும்,'' என்று கூறியுள்ளார். இந்த அரசாணை அறிவிப்பு, கல்வித்துறை மட்டுமின்றி இனி தமிழக அரசின் அனைத்து துறைகளிலும் ஊடுருவுவதற்கான ஏற்பாடு என்ற அச்சம் அரசு ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அவுட்சோர்சிங் மூலமே அரசுப் பணியிடங்கள் நிரப்பப்பட்டால் வேலைவாய்ப்பகத்தில் பதிந்து வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்களின் எதிர்காலம் என்னவாகும்? ஏற்கனவே வேலை கிடைக்காத விரக்தியில் குற்றச் சம்பவங்களில் அதிகமாக இளைஞர்கள் ஈடுபட்டு வருவதாக காவல்துறை தெரிவிக்கிறது. தற்போது அரசாணை 56ன் மூலம் அந்த எண்ணிக்கையை மேலும் அதிகமாக்க தமிழக அரசு முயற்சி செய்வது சமூகத்திற்கு ஆபத்து. எனவே, அரசாணை 56ஐ ரத்து செய்யவேண்டும். அத்துடன் அரசு பள்ளிகளில் அவுட் சோர்சிங் முறையில் துப்புரவு பணியிடங்கள் நிரப்பப்படும் என்ற அறிவிப்பை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். ஏற்கனவே உள்ள நடைமுறைப்படி துப்புரவு பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

**- D. ரவி**

# அறநிலையத்துறையில் தொடர் மோசடிகள்

# கண்டுகொள்ளுமா தமிழக அரசு?




அறநிலயத்துறையில் சிலைக்கடத்தல் தடுப்பு பிரிவு அமைத்தது போல், நில மோசடி குறித்து விசாரிக்க தனி குழு அமைத்தால், 10,000 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் மீட்க வாய்ப்பு.

அறநிலயத்துறையில் தொடர் மோசடி பல தரப்பில் இருந்து ஆதாரத்துடன் புகார் வந்தும் நடவடிக்கை எடுக்க மறுக்கும் அறநிலையத்துறை.

அறநிலையத்துறை தலைமை அலுவலகம் அமைந்திருக்கும் நுங்கம்பாக்கத்தில் மட்டும் APVP தேவஸ்தானத்திற்கு சொந்தமான சுமார் 150 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் ஸ்வாகா.

சென்னை மற்றும் சுற்று வட்டார பகுதியில் மட்டும் சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மோசடி. தமிழகம் முழுவதும் விசாரித்து நடவடிக்கை எடுத்தால் சுமார் 10,000 கோடி ரூபாய் மதிப்பிலாலான சொத்துக்கள் மீட்டு எடுக்க வாய்ப்பு, அறநிலையத்துறை அல்லது தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?

- கனகதுர்கா

# குருவிகளை மீட்டெடுக்கலாமே!

சிட்டுக்குருவிகளை மீட்டெடுக்கும் செயல் திட்டங்களை செயல்படுத்துவோர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. சிட்டுக் குருவிகளைப் பற்றிய விழிப்புணர்வை கடந்த பதினைந்து ஆண்டுகளாக பல இயற்கை ஆர்வலர்களும், சூழல் விழிப்புணர்வு தொண்டு நிறுவனத்தினரும் மக்களிடையே எடுத்துரைத்தாலும் முறையான, அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்யாத முடிவுகள், மூட நம்பிக்கைகள் தொடர்பான தகவல்கள் மட்டுமே மக்களைச் சென்றடைகின்றன.

வரத் தொடங்கும். சிறிது நாட்களில் சிட்டுக்குருவிகளும் வரும். அவை தினமும் வரத் தொடங்கிய பின் கூடு அமைப்பதற்கு எளிதாக சிறிய மரப்பெட்டிகள், மூங்கில் குழல்கள் அல்லது அட்டைப் பெட்டியை யார் கைக்கும் எட்டாத உயரத்தில் உறுதியாக அசையாதவாறு இணைத்து வையுங்கள். பெட்டிக்குள் குருவிகள் செல்லும் துவாரத்தை சிறிதாக ஒன்றரை அங்குலத்தில் வைக்க வேண்டும்.





சீட்டுக் குருவிகள் உங்கள் வீடுகளுக்கு வர வேண்டும் என்றால், உங்கள் வீட்டில் கொஞ்சம் நிழல் உள்ள பகுதிகளில் பறவைகளின் கண்ணில் படும்படியான இடத்தைத் தேர்வு செய்து அங்கே தினமும் கம்பு, தினை, அரிசி போன்ற தானியங்களை ஒரு தட்டில் வையுங்கள்.

பின்னர் அதன் அருகிலேயே ஒரு மண் கலையத்தில் தண்ணீரும் வையுங்கள். சில வாரங்களில் சின்னஞ்சிறு பறவைகள் ஒன்று, இரண்டாக வரத் தொடங்கும். அடுத்த சில நாட்களில் காகம், மைனா, புறா போன்ற பறவைகள் மிகச் சாதாரணமாக

இனப்பெருக்க காலம் தொடங்கியவுடன் குருவிகள் ஒன்றன் பின் ஒன்றாக வரத் தொடங்கும். பின்னர் வலிமையான பறவைகள் அந்தக் கூட்டை நாடி வரும். இணை சேர்ந்து கூடு அமைத்த பின்னர் மூன்றில் இருந்து நான்கு முட்டைகள் வரை இட்டு, பதினாறு நாட்கள் அடைகாத்து குஞ்சுகளைப் பொறிக்கும்.

முட்டையில் இருந்து வெளியில் வந்த குஞ்சுகள் தாயிடமிருந்து புழு, பூச்சி போன்ற புரதமிக்க உணவைப் பெற்று விரைந்து வளரும். குஞ்சுகள் முழு வளர்ச்சி அடைந்த பதினாறு நாட்களில் கூட்டை

விட்டு வெளியேறும். பின்னர் சிறிது காலம் தாயுடன் திரியும். ஓரிரு மாதங்களில் இக்குஞ்சுகள் தங்களின் வாழ்க்கையைத் தனியாக தொடங்கும். நம்மால் பெரிய காடுகளைக் காப்பாற்ற முடியாவிட்டாலும்கூட இந்த சின்னஞ் சிறு சிட்டுக்குருவிகளைக் காப்பாற்றி மனிதம் காப்போம்.

வீட்டில் சிட்டுக்குருவி, அனில் போன்றவை கூடு கட்டி குஞ்சு பொறிக்கின்றன, குட்டி போடுகின்றன. இதை சிலர் கலைத்துவிடுகிறார்கள். ஆனால், இதுபோன்று இவைகள் வருவது, கூடு கட்டுவது, குஞ்சு பொறிப்பது போன்றவற்றை அனுமதிக்கலாம்.

அந்த காலத்தில் நெற்கதிர்களை வீட்டிற்குள் கட்டித் தொங்கவிடுவார்கள். அதைச் சாப்பிட குருவி இரண்டு வரும், கத்தும், கொறித்துவிட்டு பறக்கும், மீண்டும் வரும். அதேபோல, அணிலுக்கும் கூடு கட்டிக் கொடுப்பார். தூக்கனாங் குருவி கூடு இரண்டு மூன்று எடுத்து வந்து போட்டு வைப்பார். அதை இழுத்துக்கொண்டு போய் ஜன்னல் பக்கத்தில் அது கட்டி வைக்கும். இதெல்லாம் என்னவென்றால், ஜீவாதார சக்தியை வீட்டிற்குள் கொண்டு வருவதற்கான அமைப்பு.

கழுதை படத்தை வைப்பது, நரி முகத்தில் முழிப்பது என்று சிலர் சொல்வார்கள்.






சிட்டுக்குருவி, புறா, அதற்கடுத்தது அணில் இவைகளுக்கெல்லாம் சூசகமான, சூட்சமமான சக்தியையெல்லாம் உணரக்கூடிய ஆற்றல் உண்டு. இயற்கையில் நம்மை விட நான்கறிவு, மூன்றறிவு உயிரினங்களுக்கு சில சூட்சும சக்தியை இறைவன் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் ஏதாவது ஒரு ஜீவ சக்தியை நாம் கொண்டுவர வேண்டும். ஜீவன் என்றால், மனிதனும் உயிருடன் இருக்கிறான், ஜீவனுடன் இருக்கிறான் என்று பார்க்கக் கூடாது. மனிதனைத் தாண்டி சிட்டுக்குருவி போன்றவற்றிற்கெல்லாம் ஜீவாதார சக்தி அதிகமாக இருக்கிறது. ஆனால், படங்களை வைப்பதை விட இதுபோன்று செய்தால் நல்ல பலன் இருக்கும். புறா கூடு கட்ட வழி செய்வது, அணில் கூடு கட்டினால் கலைக்காமல் இருப்பது, சிட்டுக்குருவி வீடு கட்டுவது போன்றதெல்லாம் சாதமான சக்திகளை கொண்டுவருவதற்கான ஆத்மாக்கள் இவைகளெல்லாம். இதுபோன்ற சாதகமான சக்தியைக் கொண்டு வருவனவற்றை நாம் விரட்டக் கூடாது. இதெல்லாம் வந்துவிட்டுப் போனாலே நமக்கு நல்லது நடக்கும்.

**- S. சரவணன்**

ஒரு பக்க சிறுகதை

# சுட்ட நாக்கு

குரு ஒருவருக்கு பேரழகியான ஒரு மகள் இருந்தாள், அதனால் அவளை திருமணம் முடிக்க பலர் போட்டி போட்டனர். அவர் தன் மகளை மனம் முடிக்க போட்டி போட்டவர்களிடம் “நான் இரண்டு கேள்விகள் கேட்பேன். அதற்கு சரியான பதில் சொல்பவருக்கே எனது மகள்” என்று சொன்னார். மறுநாள் போட்டியாளர்கள் அனைவரும் குரு வீட்டில் கூடி இருந்தனர். குரு அவர்களைப் பார்த்து “ உலகிலே இனிமையான ஒரு பொருளை கொண்டு வாருங்கள்” என்று சொன்னார்.

மறுநாள் எல்லோரும் ஆளுக்கொரு பொருளை கொண்டு வந்தனர். ஒருவன் தேனைக் கொண்டுவந்தான். இன்னொருவன் கரும்பைக் கொண்டு வந்தான். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு இன்னிமையான பொருளைக் கொண்டு வந்திருந்தனர்.

வரிசையில் கடைசியாக குருவின் ஒரு ஏழை சிஷ்யனும் நின்டிருந்தான். குரு அவனைப் பார்த்து நீயுமா என்று ஆச்சரியமாக கேட்டார்.சீடன் நான் உங்கள் மகளைக் காதலிக்கிறேன் என்று சொன்னான். குரு நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய் என்று கேட்டார். சீடன் தான் கொண்டு வந்திருந்த சிறிய பெட்டியை திறந்து காட்டினான்.

அதனுள் ஒரு ஆட்டின் நாக்கு இருந்தது. குரு அதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். குரு “என்ன இது எதற்காக இதை கொண்டு வந்தாய்” என்று கேட்டார். சீடன் “குருவே நீங்கள் உலகிலேயே இனிமையான பொருளை கொண்டுவர சொன்னீர்கள். நாவை விட உலகில் சிறந்த பொருள் வேறு ஏது?

மனிதனுடைய நாவை கொண்டு வர முடியவில்லை. அதனால் தான் குறிஈடாக ஆட்டின் நாவை கொண்டுவந்தேன். நாவில் இருந்து தான் இனிமையான சொற்றகள் வருகின்றன. அதை சோகத்தில் இருப்பவன் கேட்டால் சந்தோசம் அடைகிறான். நோயாளி கேட்டால் குணம் அடைகிறான்.” என்றான். குரு “இதில் நீ வெற்றி அடைந்தாய். வாழ்த்துக்கள்” என்று சொன்னார். சீடன் அடுத்த கேள்வி என்ன என்று கேட்டான்.

குரு “உலகிலேயே கசப்பான ஒரு பொருளை கொண்டு வா” என்று சொன்னார். மறுநாள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கசப்பான பொருளை கொண்டு வந்தனர். ஒருத்தன் வேப்பங்காயை கொண்டு வந்தான், இன்னொருவன் எட்டிக்காயை கொண்டு வந்தான். கடைசியாக சீடன் வந்தான். அவன் கையில் அதே பெட்டி. அவன் அதை திறந்து காட்டினான். அதே ஆட்டின் நாக்கு. குரு “என்ன விளையாடுகிறாயா? இனிமையான பொருளை கேட்டேன் நாவை கொண்டு வந்தாய். கசப்பான பொருளை கேட்டதற்கும் நாவை கொண்டு வந்து இருக்கிறாயே? என்ன அர்த்தம்?” என்று கோபமாக கேட்டார்.

சீடன் “தீய சொற்களை பேசும் நாவை போல கசப்பான பொருள் உலகில் உண்டா? அதில் இருந்து வரும் சொற்களைக் கேட்டால் மகிழ்ச்சியாய் இருப்பவனும் துயரம் கொள்கிறான். நட்பாக இருப்பவனும் பகையாக மாறுகிறான். எனவே நாவு தான் உலகிலேயே கசப்பான பொருள்” என்று சொன்னான். சீடனின் அறிவைக் கண்டு வியர்ந்த குரு தான் மகளை அவனுக்கே மனம் முடித்துக் கொடுத்தார்.

நாவு ஒரு அற்புத பொருள். சொர்கத்தின் திறவுகோலும் அது தான். நரகத்தின் வாசல்படியும் அது தான்.


கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.

உண்மை துணிவு நேர்மை

# அரசியல் தீர்ப்பு

சமூகம், அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்



# ராகுலின் அதிரடி

# அதிர்ச்சியில் மோடி

MAKKAL VISARANAI, Tamil Monthly. Regd. No. TN/CC(S)DN/461/19-21
Registered with Registrar of Newspaper for India Under No. TNTAM44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்









- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements

and anything







No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, Ph : 044 - 4861 5321**